# AHARAM அகரம்

தரம் 5 - 11 வரை எண்: 10 எழுத்து: 05 மே - 2016 www.aharam.lk

## சிறகடித்துப் பறக்கும்
# சிட்டுக் குருவி



50/-

மாதாந்த சிறுவர் சஞ்சிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றிகரமாக அடுத்த BATCH ஐ நோக்கி,

அங்கிகாரம் பெற்ற சான்றிதழ், பதக்கங்கள்
வயதெல்லை கிடையாது

JM MEDIA COLLEGE
REG No: 04201

# 3 MONTHS

# Advance Certificate in Mass Media

**ஊடகத்துறையில் சாதிக்கத் துடிப்பவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்**

அடிப்படையில் இருந்தே கற்பிக்கப்படும் | Video, Audio Editing | PHOTOGRAPHY
முன்மாதிரி ஊடகவியலாளரின் பண்புகள் | அச்சு, எழுத்து, இலத்திரனியல் துறைகள்
SOFTWAREகளுடன் அறிமுகம் | Stage Announcing | News Reading
FIELD TRIP | செயன்முறைகளுடன் கூடிய விளக்கம் | பாதுகாப்பான சூழல்
ஞாயிற்றுக்கிழமைகளில் வகுப்பு | இன்னும் பல...



## ஆண் | பெண்

இருபாலாருக்கும் கலந்து கொள்ளலாம்

1st HD Voice RADIO

JM MEDIA COLLEGE இன்
முதலாவது குழு மாணவர்கள்
வழங்கும் துதி எப்.எம்

THUTHI துதி
சாந்திக்கு வழி
FM 103.1

பத்தோடு பதினொன்றல்ல,
அத்தனையும்,
புத்தம் புதிய நிகழ்ச்சி வடிவங்கள்

GET IT ON Google play "JMmediaLK"
103.1MHz
www:// jmmedia.lk


WWW.JMMEDIA.LK

மே 06, 07, 08ம் திகதிகளில் காலை 08 மணி முதல் 08 மணி வரை

WhatsApp
# 0777 362 492

**JM MEDIA PRODUCTION**
No. 79, Thakiya Road, Mawanella | 078 628 33 23
JMmedia.LK
JMmediaLK


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



06

சிட்டுக் குருவிகள் உருவத்தில் மிகவும் சிறியவை. சுமார் 16 செ.மீ. நீளம்தான் இருக்கும். மேலும் 27 முதல் 39 கிராம் நிறை கொண்டவை. ஆண் குருவியின் தலை, முதுகு, வால், மேல் பகுதி சிறகுகள், பிடரி போன்றவை பழுப்பு, சாம்பல் நிறங்களிலும் மேல் முதுகும் இறக்கைகளும் பழுப்பு, கறுப்பு நிறங்களுடனும் காணப்படும்.




38



22



32



30


AHARAM
# அகரம்

எண்: 10 - மே : 2016 - எழுத்து: 05






பிரதம ஆசிரியர்
டாக்டர் ஆகில் அஹ்மட் ஷரிபுத்தீன்

**ஆலோசனைக் குழு**

அஷ்ஷெய்க் ஏ.ஸி. அகார் முஹம்மத் (நளீமி)
(பிரதிப் பணிப்பாளர், ஜாமிஆ நளீமிய்யா)

எம்.எச். எம். ஹஸன் M.Ed
(முன்னாள் பிரதம செயற்றிட்ட அதிகாரி, தேசிய கல்வி நிறுவகம்)

ஏ.ஆர்.எம். ஜிப்ரி BEd, MEd
(அதிபர், களு/முஸ்லிம் மத்திய கல்லூரி, களுத்துறை)

அன்பு ஜவஹர்ஷா
(ஓய்வு பெற்ற அதிபர்)

ஆசிரியர்
எம். றிஸ்வி ஸுபைர்

துணை ஆசிரியர்
எஸ். ஸஹீர் அப்பாஸ்.(இர்பானி)

தளக் கோலம்
எம்.ஐ.எம். ஹரீஸ்


**பாடத்திட்டம்**


| | |
|---|---|
| புலமைப்பரிசில் | 40 |
| அரபு மொழி | 14 |
| வரலாறு | 20 |





36


தொடர்புகளுக்கு:

அகரம்
77, ஸ்ரீ வஜிரஞான மாவத்தை
கொழும்பு 00900
தொ.பே : 077 741 2561
பெக்ஸ் : 011 268 6030
Web : www.aharam.lk
E.mail : aharamipc@gmail.com



சந்தா விபரம்

| | |
|---|---|
| தனிப் பிரதி | : 50/= |
| 1 வருட சந்தா | : 800/= |
| 6 மாத சந்தா | : 400/= |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுடன் ஆசிரியர்...

# திறன்களை விருத்தி செய்வதன் அவசியம்

மனித வாழ்க்கையில் மாணவப் பருவம் என்பது பல்கலைக்கழகம் வரை செல்கிறது. கல்வியைத் தொடரும் ஒருவர் சுமார் 18 வருடங்களை கற்றலில் கழிக்கிறார். இதில் ஆரம்பப் பிரிவு என்பது பெற்றோரின், ஆசிரியரின் நேரடி வழிகாட்டலில், அவர்களால் திட்டமிடப்படும் விடயங்களைக் கற்றுக் கொள்வதில் கழிகிறது. இடைநிலைக் கல்வியின் முதற்கட்டமான கனிஷ்ட இடைநிலைக் காலம் பாடசாலை மாணவர்களின் ஆளுமை விருத்திக்கான அறிவுகளைக் கற்கும் பருவமாக உள்ளது. கனிஷ்ட இடைநிலைப் பருவத்தில் க.பொ.த. (சா/த) பரீட்சைக்கு ஆயத்தம் செய்ய வேண்டியிருக்கிறது.

இந்நிலையில், மாணவர்களிடம் மறைந்திருக்கும் உள்ளார்ந்த திறன்களை இனங்கண்டு அவற்றை மேம்படுத்துவது எவ்வாறு? கனிஷ்ட, சிரேஷ்ட இடையியல் பருவங்களின் போதுதான் மாணவர்களிடையே புதிய எண்ணக்கருக்கள் தோன்றுகின்றன. எல்லா மனிதர்களும் ஒரே பணியைச் செய்வதற்காகப் படைக்கப்பட்டவர்களல்ல. உலகிலுள்ள அனைத்துத் துறைகளுக்கும் உலகம் எதிர்நோக்கும் அத்தனை பிரச்சினைகளுக்கும் உரிய திறமைசாலிகள் ஒவ்வொரு யுகத்திலும் பிறக்கின்றனர். இலங்கை பாடசாலைகளில் ஒவ்வொரு வருடமும் சுமார் மூன்று இலட்சம் பிள்ளைகள் தரம் ஒன்றில் சேர்க்கப்படுகின்றனர். அவர்களுள் இந்த நாட்டுக்குத் தேவையான எல்லா வகை நிபுணர்களும் இல்லாமலில்லை. காலங்காலமாக இருந்து வரும் வழமையான, மரபு ரீதியான புத்தகப் படிப்பு, பரீட்சை, டியூஷன் என்று இருந்துவிட்டால் இத்தகைய நிபுணர்களை அடைந்து கொள்ள முடியுமா? வெறும் பரீட்சையில் மாத்திரம் சித்தியடைபவர்களுக்கு எதிர்காலம் அவ்வளவு சுபிட்சமாக இல்லை. தன்னிடம் மறைந்துள்ள திறன்களை, தேர்ச்சிகளை இனங்கண்டு கொள்ள ஒவ்வொருவரும் முயற்சிக்க வேண்டும். அதற்கு உதவி செய்யும் துறைகளை, பாடங்களைத் தெரிவு செய்து கற்றுக் கொள்ள வேண்டும்.

இலங்கையில் இன்று கணினி மென்பொருள் துறையில் துறைபோகக் கற்று பல நவீன கண்டுபிடிப்புகளைச் செய்யும் ஓர் இளைஞன் பற்றிய குறிப்பு ஒரு தேசியப் பத்திரிகையில் வந்திருந்தது. கணினி வடிவமைப்பில் இன்று அவர் குறிப்பிடத்தக்க ஒரு நிபுணராக உள்ளார். அவருடைய பிள்ளைப் பருவத்தின்போது அவர் விதவிதமான வெசாக் கூடுகளை அமைத்து, அவற்றை கண்காட்சிகளிலும் அயலவர்களிடம் பகிர்ந்து கொண்டும் இன்பம் காண்பவர்.

ஒவ்வொரு வெசாக் கொண்டாட்டத்தின் போதும் வெவ்வேறு வடிவத்தில் கூடுகளை அமைத்ததில் வடிவமைப்பு தொடர்பாக அவரின் உள்ளார்ந்த திறன் வெளிப்பட்டது. பிற்காலத்தில் அவர் கணினி மென்பொருள் வடிவமைப்புத் துறையைத் தேர்ந்தெடுத்த போது உள்ளே இருந்த அவரது திறமைகள் வெகுவேகமாக வெளிப்படத் துவங்கின. குறுகிய காலத்தில் அவரால் தனது துறையில் கால்பதிக்க முடிந்தது.

எல்லோரிடமும் இத்தகைய ஏதோ ஒரு திறமை இருக்கவே செய்கிறது. வரைதல், வனைதல், விளையாட்டு மட்டுமன்றி, எதிர்கால உலகைச் செவ்வையாக்க இன்னும் எத்தனை துறைகள் தேவைப்படுகின்றன! ஆகவே, புதிதாகச் சிந்தித்து நீங்கள் எந்தத் துறைக்குரியவர்கள், எதில் உங்களுக்கான எதிர்காலம் இருக்கிறது என்பதை நீங்களாக இனம்கண்டு அது தொடர்பான புத்தகங்களை வாசிக்கவும் பயிற்சிகளில் ஈடுபடவும் இப்போதிருந்தே ஆரம்பித்தால் தொழிலுக்காக அரசாங்கத்தை மட்டுமே நம்பியிருக்க வேண்டிய அவல நிலையைத் தவிர்க்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹதீஸ் பூங்காவிலிருந்து

ஏ.ஆர்.எம். ஸஜித் (இஸ்லாஹி)

அனஸ் இப்னு மாலிக் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கின்றார்கள், "நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மலசலகூடம் நுழையும்போது அல்லாஹும்ம இன்னீ அஊது பிக மினல் ஹுப்தி வல் ஹபாஇதி (யாஅல்லாஹ்! கெட்ட ஆண் சைத்தானிடமிருந்தும் கெட்ட பெண் சைத்தானிடமிருந்தும் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகின்றேன்) என்று கூறுவார்கள்." (புஹாரி, முஸ்லிம்)

இஸ்லாம் மனித வாழ்வின் சகல விடயங்களுக்கும் அழகிய வழிகாட்டல்களைத் தந்துள்ளது. பாதணி அணிவது முதல் ஆட்சி புரியும் வரை, அதன் வழிகாட்டல் நீண்டு செல்கின்றது. மேற்படி ஹதீஸின் வாயிலாகவும் நபியவர்கள் மலசலகூடத்திற்குள் நுழையும் போது கடைப்பிடிக்க வேண்டிய வழிகாட்டலை எமக்குத் தந்துள்ளார்கள்.

மனிதனுக்கு அல்லாஹ் ஏற்படுத்தியிருக்கின்ற இயற்கையான தேவைகளுள் ஒன்றே மலசலம் கழிப்பதாகும். இவ்வியற்கைத் தேவையை நபியவர்கள் காட்டித் தந்துள்ள பிரகாரம் அமைத்துக் கொள்ளும்போது அது எமக்கு பாரியளவில் நன்மைகளைப் பெற்றுத் தருகின்றது.

மலசலகூட விடயத்தில் மாத்திரமல்லாது, அன்றாடம் நாம் மேற்கொள்கின்ற ஒவ்வொரு காரியத்திலும் நபிகளாரின் வழிகாட்டல்களை கடைப்பிடிப்பது இறையன்பை எமக்கு பெற்றுத் தருவதாகவே உள்ளது.

மனிதனின் எதிரியான சைத்தான் மனிதனை வழிகெடுப்பதற்காக எப்போதும் மனித நாளங்களில் ஊர்ந்து கொண்டிருக்கின்றான். மலசலகூடம் சைத்தானுடைய இருப்பிடமாகவும் அவனுக்கு மிகவும் விருப்பமான ஓர் இடமாகவும் காணப்படுகின்றது.

இந்த விடயத்தை அறிந்த நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மலசலகூடத்திற்குள் நுழையும்போது சைத்தான்களுடைய தீங்குகளிலிருந்து அல்லாஹ்விடத்தில் பாதுகாப்புத் தேடுபவர்களாக இருந்தார்கள்.

அதேபோன்று, அங்கு எம்மை அறியாமலேயே ஏதேனும் தவறுகள் நடைபெற்றிருக்கலாம் என்பதால் மலசலகூடத்திலிருந்து வெளியேறுகின்ற போது, ''இறைவா! உன்னிடம் மன்னிப்புத் தேடுகின்றேன் (உப்ரானக)'' என்ற பிரார்த்தனையை ஓதிக் கொள்வார்கள்.

இன்று மலசலம் கழிக்கின்ற தேவையை நிறைவேற்றுகின்ற போது பலர் அலட்சியமாக நடந்து கொள்கின்றார்கள். பாடல்கள் பாடுவது, பிறருடன் கதைப்பது, கையடக்கத் தொலைபேசியில் உரையாடுவது, உட்காரும் போதும் எழும்பும்போதும் சுப்ஹானல்லாஹ், அல்லாஹு அக்பர் போன்ற வார்த்தைகளைப் பாவிப்பது என பல தவறுகளை செய்து விடுகின்றனர்.

இன்னும் சிலர் தமது நேரம் வீணாக சென்றுவிடக்கூடாது என்ற எண்ணத்தில் மலசலம் கழிக்கின்றபோது கண்ணியமிக்க அறிவினைத் தரக்கூடிய புத்தகங்களை வாசிக்கின்ற பழக்கத்தையும் கொண்டுள்ளனர். இச்செயற்பாடுகள் முற்று முழுதாக நபியவர்களின் சுன்னாவுக்கு மாற்றமானவையாகும்.

எனவே, நாமும் நபியவர்களின் சுன்னாவை எமது வாழ்வில் கடைப்பிடிக்கும் முகமாக மலசலகூடத்திற்குள் நுழையும்போதும் வெளியேறும்போதும் மேற்படி பிரார்த்தனைகளை மனனம் செய்து அவற்றை ஓதிக் கொள்வோம்.

அத்தோடு, இஸ்லாம் காட்டித் தருகின்ற பிரகாரம் மலசலம் கழிக்கும்போது பின்வரும் ஒழுங்குகளை கடைப்பிடித்து நடக்க வேண்டியது அவசியமாகும்:

- ❖ காலில் பாதணி அணிந்து கொள்ளல்.
- ❖ அல்குர்ஆன், அல்ஹதீஸ் போன்றவற்றை எம்மோடு வைத்துக் கொள்ளாதிருத்தல்.
- ❖ இடது காலை முதலில் வைத்து மலசலகூடத்திற்குள் நுழைதல்.
- ❖ உட்காரும்போது வலது காலை நிறுத்தி வைத்து இடது பக்கம் சாய்ந்து உட்காருதல்.
- ❖ இடது கரத்தால் சுத்தம் செய்தல்.
- ❖ மலசலகூடத்திலிருந்து வெளியே வரும்போது வலது காலை முற்படுத்துதல் முதலில் வெளியே வைத்து வருதல்.
- ❖ புற்கள், மக்கள் நடமாடும் இடங்கள், நடைபாதை, கனி தரும் மரங்களுக்குக் கீழ், மையவாடி, நீர் தேங்கி நிற்கும் இடங்கள் மற்றும் ஓடுகின்ற நீரில் கழிக்காதிருத்தல்.
- ❖ நின்ற நிலையில் சிறுநீர் கழித்தல் கூடாது.

  பேசுதல், அல்குர்ஆன் வசனங்களை ஓதுதல், துஆக்களை ஓதுதல் போன்றவற்றிலிருந்து தவிர்ந்திருத்தல்.
- ❖ மலத்தின் மீது எச்சில் துப்புதல் கூடாது.

இத்தகைய உயரிய பண்புகளைப் பேணி, சைத்தானின் தீங்குகளிலிருந்து பாதுகாப்பைத் தேடிக் கொள்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குர்ஆனிய களஞ்சியம்

தொடர் 10

ஆங்கிலத்தில்: ஸனீயாஸ்னைன் கான் (இந்தியா)
தமிழில்: ஹஸன் இக்பால், யாழ்ப்பாணம்

# குர்ஆனில் கூறப்பட்டுள்ள வரலாற்றுச் சம்பவங்கள்

## நீதி வழுவா தீர்ப்பு

ஜெரூஸலத்தை ஆட்சி செய்த தாவூத் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் புதல்வனான சுலைமான் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் அல்லாஹ்வின் அருளினால் சிறுபிராயம் தொட்டே அறிவுக் கூர்மை மிக்கவராகத் திகழ்ந்தார். ஒரு சமயம் தாவூத் (அலைஹிஸ்ஸலாம்)அவர்களிடம் ஒருவர் தனது விவசாயப் பயிர்களை அயலவருக்குச் சொந்தமான ஆடு நாசப்படுத்தி விட்டதாக கோபமாக முறையிட்டார். அப்போது தாவூத் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் சேதப்படுத்திய பயிர்களுக்கு நஷ்டஈடாக அந்த ஆட்டை எடுத்துக் கொள்ளுமாறு தீர்ப்பளித்தார். இது கண்ட சுலைமான் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் இதற்கு பகரமாக நடுநிலையான தீர்ப்பொன்றை எடுத்துரைத்தார். அதாவது, பயிர்களின் அறுவடைக் காலம் வரை ஆட்டிடம் இருந்து பாலையும் உரோமத்தையும் பெற்றுக் கொள்ள பயிர்களின் சொந்தக்காரனுக்கு முழு உரிமை வழங்கி, அறுவடையின் பின்னர் ஆட்டை உரியவரிடம் ஒப்படைத்து விடுமாறும் கட்டளையிட்டார்.



## தோட்டங்களின் சொந்தக்காரன்

செல்வந்தன் ஒருவன் பூத்துக் குலுங்கும் பழத் தோட்டங்கள் இரண்டை அல்லாஹ்வின் அருளினால் பெற்றிருந்தும் அது தொடர்பில் இறைவனுக்கு நன்றி செலுத்த மறுத்து வந்தான். தனது திறமையினாலேயே தோட்டங்கள் செழித்து வளருகின்றன என அகங்காரத்துடன் கூறி வந்தான். ஏழை எளியோருக்கு உணவளிக்காது விரட்டினான். மற்றையவர் இறைவனுக்கு நன்றி செலுத்துமாறு செல்வந்தனை வற்புறுத்தியும் பலனில்லை. அடுத்த நாள் புயல் காற்றினால் செல்வந்தனின் தோட்டங்கள் முற்று முழுதாக அழிந்து போயின. செல்வந்தன் தனது தவறை உணர்ந்து அல்லாஹ்விடம் மன்னிப்புத் தேடினான்.

## அற்புதக் கோல்

சுமார் 4,000 வருடங்களுக்கு முன் எகிப்தை கொடுங்கோல் ஆட்சி புரிந்த மன்னன் பிர்அவ்ன் என்பவனுக்கு இஸ்லாத்தை எத்தி வைக்க இறைவன் மூஸா (அலைஹிஸ்ஸலாம்) அவர்களை அற்புதங்கள் பல வழங்கி அனுப்பி வைத்தான். ஆனால், கொடியவன் பிர்அவ்ன் அல்லாஹ்வினால் மூஸா (அலைஹிஸ்ஸலாம்) அவர்களுக்கு வழங்கப்பட்ட அற்புதங்களை நம்ப மறுத்து அவற்றை மந்திர ஜாலங்கள் என ஏளனம் செய்தான். தனது மந்திரவாதிகள் பலரை அழைத்து மூஸா (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் இறை அற்புதங்களுடன் போட்டி போடச் செய்தான். அந்த மந்திரவாதிகள் தமது கயிறுகளை மந்திர வித்தை மூலம் பாம்புகள்போல தோற்றமளிக்கச் செய்தனர். அத்தருணம் மூஸா (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் தனது கையில் வைத்திருந்த கோலை தூக்கியெறிந்தார். அது அனைத்தையும் விட மிகப் பெரிய பாம்பாக உருவெடுத்து ஏனைய பாம்புகள் அனைத்தையும் விழுங்கியது. மந்திரவாதிகள் இதனைக் கண்ணுற்றதும் இது நிச்சயமாக இறைவனின் அற்புதங்களில் ஒன்றே என பறைசாற்றினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சினையான ஒட்டகம்

நபி ஸாலிஹ் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள்
ஸமூத் மக்களுக்கு நேர்வழி காட்ட அல்லாஹ்வால்
அனுப்பப்பட்டவர். உயர்ந்த கட்டடங்களைக்
கொண்ட அச்சமூகத்தினர் தமது சொத்து செல்வங்
கள் தொடர்பில் பெருமையும் அகங்காரமும் கொண்
டவர்களாக காணப்பட்டனர். அச்சமூகத்தினர் அற்
புதம் ஒன்றைக் காட்டுமாறு ஸாலிஹ் (அலைஹிஸ்
ஸலாம்) அவர்களை கேட்டுக் கொண்டனர். இறை
வனிடமிருந்து ஸாலிஹ் (அலைஹிஸ்ஸலாம்) அவர்
கள் அற்புதமாக சினையான பெண் ஒட்டகமொன்றை
பெற்றுக் கொண்டார்கள். ஆணவம் மிகுந்த அம்மக்
கள் அந்த பெண் ஒட்டகத்தை கொன்று விட்டனர்.
மேலும், ஸாலிஹ் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களை
கொல்லவும் சதித் திட்டம் தீட்டினர். இறைவனின்
சாபம் அம்மக்கள் மீது இறங்கியது. பாரிய நிலநடுக்
கம் ஒன்றை ஏற்படுத்தி நன்றி கெட்ட அச்சமூ
கத்தை இறைவன் அழித்தான்.

## தடுக்கப்பட்ட நாள்

மூஸா (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் காலத்
தில் பனூ இஸ்ரவேல் மக்களுக்கு சனிக்கிழமை
மீன் பிடிப்பதற்கும் வேறு வேலைகள் செய்வதற்
கும் தடை செய்யப்பட்ட நாளாக அமைந்தது. அந்
நாளில் இறைவனை வணங்கி வழிபடுமாறு கட்ட
ளையிடப்பட்டது. ஆனால், சனிக்கிழமைகளில்
மாத்திரமே மீன்கள் கூட்டம் கூட்டமாக கடலில்
வரத் தொடங்கின. பேராசை கொண்ட பனூ இஸ்ர
வேல் மக்கள் கடற்கரையில் பள்ளங்கள் தோண்டி
வைத்தனர். மீன்கள் கூட்டமாக அதனுள் விழுந்
தால் அடுத்த நாள் சென்று பெற்றுக் கொள்ள முடி
யும் என நினைத்திருந்தனர். இவ்வாறாக இறைவ
னின் கட்டளையை பின்பற்றாமல் பாசாங்கு செய்
தனர்.

## மாபெரும் தியாகம்

ஒரு நாள் இரவில் இப்றாஹீம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் தன் மகனை இறைவனுக்காக பலி கொடுப்பதாகக் கனவு கண்டார். இது பற்றி தன் மகன் இஸ்மாயீல் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களிடம் கூறியபோது இறைவன் மீது விசுவாசம் மிகுந்த அவர் அதற்குச் சம்மதித்தார். மகனை இறைவனுக்காக அறுத்துப் பலியிடும் நோக்குடன் மினாவுக்கு இப்றாஹீம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் மகனைக் அழைத்துக் கொண்டு சென்றார்கள். சைத்தான் இதனை தடுத்து நிறுத்த முற்பட்டபோது அவனை கல்லெறிந்து விரட்டினர். இவர்களின் இறை விசுவாசத்தில் திருப்தி கொண்ட அல்லாஹ் மகனுக்கு பதிலாக பலியிடுவதற்கு செம்மறி ஆடு ஒன்றை இறக்கி வைத்தான்.

## கௌரவ விருந்தாளிகள்

ஒரு நாள் வானவர்கள் மனித உருவத்தில் இப்றாஹீம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் இல்லத்தினுள் ஸலாம் கூறி நுழைந்தனர். இப்றாஹீம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் அம்மனிதர்களை இதற்கு முன்னர் அறிந்திருக்கவில்லை. எனினும், பதில் ஸலாம் கூறிவிட்டு விருந்தினர்களுக்காக பசுக் கன்றை சமைத்துக் கொண்டு வந்தார். ஆனால், மனித உருவத்தில் இருந்த வானவர்கள் அதனை தொட்டும் பார்க்கவில்லை. இதனால், சந்தேகமுற்ற இப்றாஹீம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் அச்சமடைந்தார். ''பயப்பட வேண்டாம். உங்களுக்கு குழந்தை செல்வம் பற்றிய சுப செய்தி கூறவே நாங்கள் வந்துள்ளோம்'' என அவ்வானவர்கள் கூறினர். இது கேட்ட இப்றாஹீம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் மனைவி நம்பிக்கையிழந்து, ''நானோ வயோதிபம் அடைந்த முதுமைப் பெண்; எனக்கு எவ்வாறு குழந்தை கிடைக்க முடியும்?'' எனக் கூறி அழுதார். இறைவனின் நாட்டம் அதுவே. அவனே யாவற்றையும் அறிந்தவன் என வானவர்கள் கூறினர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலிப் அலி (இஸ்லாஹி)
www.aliaalif.tk / aalifali@gmail.com



# சிறகடித்துப் பறக்கும் சிட்டுக் குருவி

அண்மையில் எனது நண்பர் ஒருவரின் வீட்டுக்குச் சென்றிருந்தேன். வரவேற்பறையில் அமர்ந்திருக்கும்போது இரண்டு சிட்டுக் குருவிகள் உள்ளே வருவதும் வெளியே செல்வதும் அங்கும் இங்கும் பறப்பதுமாக இருந்தன. அவரிடம் கேட்டபோது நீண்ட நாட்களாக இவை இங்கு இருப்பதாகவும் அங்கே சுவரில் பொருத்தப்பட்டிருந்த மின் விளக்கில் அவை கூடு கட்டியிருப்பதாகவும் கூறினார். முன்பெல்லாம் சர்வ சாதாரணமாகக் காணக் கிடைக்கும் சிட்டுக் குருவிகளை இப்போது அரிதாகவே காண முடிகிறது. சிட்டுக் குருவிகளின் தலைமறைவுக்குப் பின்னால் ஆச்சரியமான பல விடயங்கள் இருக்கின்றன. எனவே, அவை பற்றியும் சிட்டுக் குருவிகளின் வாழ்க்கை முறை பற்றியும் இத்தொடரில் உங்களுடன் பகிர்ந்துகொள்ள நினைக்கிறேன்.

**அறிமுகம்**

பறவை உலகில் காகத்திற்கு அடுத்ததாக மனிதனோடு மிகவும் நெருக்கமான பறவை சிட்டுக் குருவிதான். இவை மனிதர்களை அண்டி வாழ்பவை. ஆங்கிலத்தில் **SPARROW** என்றும் தமிழில் சிட்டுக் குருவி, ஊர்க் குருவி, அடைக்கலக் குருவி, மனையுறை குருவி என்றெல்லாம் அழைக்கப்படுகின்றது. தொன்மைக்காலம் முதல் இவை எம்மைச் சார்ந்து வாழ்வதால் தான் இப்படியான பெயர்கள் இவற்றுக்கு சூட்டப்பட்டுள்ளன.

கார்லை லினேயல் என்ற அறிஞர்தான் முதல் முதலில் சிட்டுக் குருவியை அடையாளப்படுத்தி, வகைப்படுத்தினார். கேரளமாநிலத்தை சேர்ந்த தான்யா என்ற விலங்கு நல பெண் ஆய்வாளர் தன்னுடைய முனைவர் பட்ட ஆய்வுக்கு சிட்டுக் குருவிகளின் வாழ்க்கை முறையைத் தேர்வு செய்துள்ளார். இதுவரை சிட்டுக் குருவிகள் தொடர்பில் மட்டும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மட்டுமன்றி, வருடந்தோறும் மார்ச் மாதம் 20 ஆம் திகதி உலக சிட்டுக் குருவிகள் தினமாகப் பிரகடனம் செய்து அவற்றைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கவிதை அடிகளிலும் பாடல் வரிகளிலும் கூட சிட்டுக் குருவிகள் இடம்பிடித்துள்ளன. அந்த அளவு இப்பறவையினத்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திற்கும் எமக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. இவை எம்மை நெருங்கி வாழ்ந்தாலும் அவற்றை எம்மோடு பழக்கப்படுத்திக் கொள்ளவும் முடியாது; செல்லப் பறவைகளாக வளர்க்கவும் முடியாது.

**உடலமைப்பு**

சிட்டுக் குருவிகள் உருவத்தில் மிகவும் சிறியவை. சுமார் 16 செ.மீ. நீளம்தான் இருக்கும். மேலும் 27 முதல் 39 கிராம் நிறை கொண்டவை. ஆண் குருவியின் தலை, முதுகு, வால், மேல் பகுதி சிறகுகள், பிடரி போன்றவை பழுப்பு, சாம்பல் நிறங்களிலும் மேல் முதுகும் இறக்கைகளும் பழுப்பு, கறுப்பு நிறங்களுடனும் காணப்படும். பெண் பறவையின் உடலின் மேல் பகுதியில் மஞ்சள் தோய்ந்த பழுப்பு, சாம்பல் கோடுகளும் காணப்படும்.

கூம்பு வடிவில் உள்ள சிறிய அலகினால் தமது உணவைக் கொத்தித் தின்கின்றன. இரண்டு சிறிய கால்களும் அவற்றில் உள்ள விரல்களும் நகங்களும் எத்தி, துள்ளித் திரியவும் இரைகளையும் கிளைகளையும் இறுகப் பற்றிப் பிடித்துக் கொள்ளவும் உதவுகின்றன. சிட்டுக் குருவிகளின் விஷேட அம்சமே சட்டென்று மிக வேகமாகப் பறக்கும் ஆற்றல்தான். கண் சிமிட்டும் வேகத்தில் தமது இறக்கைகளைப் பயன்படுத்தி பறந்து விடுகின்றன. ஒவ்வொரு திசையிலும் சிட் சிட்டென்று திரும்பிப் பறப்பதற்கு அவற்றின் வால் பகுதி உதவுகின்றது. இப்படியான உடலமைப்பைப் பெற்றுள்ள பறவையினம் தான் சிட்டுக் குருவி.

**வாழிடமும் வசிப்பிடமும்**

சிட்டுக் குருவிகள் பொதுவாக எல்லா உலக நாடுகளிலும் வாழும் தகவமைப்பைக் கொண்ட பறவையினமாகும். அதிலும் குறிப்பாக ஆசியா, ஐரோப்பா, ஆபிரிக்கா, அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகளிலும் இவை வாழ்கின்றன. எமது இலங்கை நாட்டிலும் இவற்றைத் தாராளமாகக் கண்டுகொள்ளலாம். ஒவ்வொரு பகுதியிலும் வாழும் குருவிகள் அவ்வப் பகுதிகளின் குளிர், பனி, வெப்பம் போன்ற தட்ப வெப்ப சூழலுக்கு இயைந்து வாழும் குணாதிசயங்களைக் கொண்டுள்ளன.

இவை மனிதர்கள் வாழும் பகுதிகளைத் தமது வசிப்பிடமாகக் கொள்கின்றன. நகர்ப்புற வீடுகளிலும் கிராமப் புறங்களிலும் வயல் வெளிகளிலும், தானியக் கிடங்குகளின் அருகிலும் வாழக் கூடியவை. மரங்கள், பற்றைகள், எமது வீட்டுக் கூரைகள், சுவர் இடுக்குகள், மற்றும் இவற்றுக்கென்று வீட்டுச் சுவர்களில் தொங்கவிடப்பட்டிருக்கும் மண் முட்டிகள் போன்ற இடங்களில் கூடுகளை அமைத்துக் கொள்கின்றன. வைக்கோல், இலை, சிறு மரக் குச்சிகள், வாழை, தென்னை நார்கள் என்பவற்றைக் கொண்டு தமது கூடுகளைக் கிண்ண வடிவில் கட்டுகின்றன.

இவற்றின் அப்பாவித்தனமான குறும்புத்தனமான தோற்றத்தால் இவற்றின் கூடுகளை யாரும் கலைக்க விரும்புவதுமில்லை. அத்தோடு கிராமப் புறங்களில், இவற்றின் கூடுகளைக் கலைத்தால் அந்த வீட்டில் சண்டை சச்சரவுகள் உருவாகும் என்ற மூட நம்பிக்கை இருப்பதாலும் யாரும் இவற்றைத் தொந்தரவு செய்வதுமில்லை. அவற்றுக்கு உணவுகளை வைத்து இரக்கம் காட்டவே யாரும் முயற்சிப்பர். விரட்டினாலும் இலகுவில் செல்லாது. மீண்டும் வெகு சகஜமாக வீட்டுக்குள் நுழைந்துவிடும். அப்படிப்பட்ட கில்லாடிகள்தான் இவைகள். மனிதர்கள் வாழும் பகுதிகளில் கூடுகட்டுவதால் இவற்றுக்கு பிற எதிரிகளிடமிருந்து ஆபத்துக்கள் குறைவு என்பதால்தான் இவை மனிதர்கள் வாழும் பகுதிகளில் கூடுகட்டி, சஞ்சரித்து வாழ்வதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

**உணவு முறை**

சிட்டுக்குருவிகள் அனைத்துண்ணிகள். தானியங்களையும் சிறு காய்கள், பழங்களையும் விதைகளையும் புழு, பூச்சிகளையும் உணவாக உட்கொள்ளும். நெற் கதிர்களும் பஜ்ரி விதைகளும்தான் இவற்றின் மிக விருப்பமான உணவு. இவையல்லாமல் சோளம், பயறு வகைகள், கோதுமை, அரிசி, பருப்பு போன்றவற்றையும் விரும்பி உண்ணும். சில வகைக் குருவிகள் பூமொட்டுகளையும், கண்குன், பொன்னாங்காணி போன்ற கீரைகளையும் உண்ணும்.

இவை இனப்பெருக்க காலத்தில் மட்டுமே இணையாக இரை தேடித் திரிவதை காணலாம். மற்ற காலங்களில் ஆண், பெண் தனித்தனியே இரை தேடித் திரியும் வழக்கம் உடையது. கூட்டாக இரை தேடிச் செல்லும் இவை நீர்த்தேக்கங்களைக் கண்டால் உடனே குதூகலமாக நீராட இறங்கிவிடும். நீர் பருகுவது மட்டுமன்றி, குளித்து நீராடி விட்டுத்தான் செல்லும். வயலோரங்களில் அதிகமாக இந்தக் காட்சிகளைக் கண்டு மகிழலாம்.

**இனப்பெருக்கம்**

சிட்டுக் குருவிகளின் வாழ்நாள் சுமார் 13 ஆண்டுகளாகும். பருவமடைந்தது முதல் ஆண்டுதோறும் இனப்பெருக்கம் செய்யும் இயல்புடையவைதான் சிட்டுக் குருவிகள். தனித்தனியாக இருக்கும் ஆண், பெண் சிட்டுக் குருவிகள் இனப்பெருக்க காலத்தில் மட்டும் ஒன்று





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்கின்றன. இரண்டும் சேர்ந்து பாதுகாப்பான ஓர் இடத்தில் தமக்கான கூட்டைக் கட்டுகின்றன. பின்னர் பெண் குருவி முட்டையிடும். ஒரு தடவையில் 3 முதல் 5 வரையான முட்டைகளை இடும். முட்டைகள் சிறிதாகவும் இள நீலம், வெண்மை நிறங்களுடன் இருக்கும். முட்டையை ஆண், பெண் இரு குருவிகளும் மாறி மாறி அடைகாக்கும்.

இவ்வாறு 15 முதல் 20 நாட்களுக்குள் முட்டை வெடித்து குஞ்சுப் பறவைகள் வெளியே வரும். அவற்றுக்கும் ஆண், பெண் இரு பறவைகளும் சேர்ந்தே உணவூட்டும். குஞ்சுகள் விரைவாக வளர வேண்டும் என்பதால் ஆரம்பத்தில் அவற்றுக்கு சிறு புழு, பூச்சி, வண்டுகளையே உணவாக ஊட்டுகின்றன. குஞ்சுகள் பெரிதாகும் வரை கூட்டிலேயே வளர்கின்றன. பறக்கத் தொடங்கியவுடன் தனியே பிரிந்து சென்று விடுகின்றன. ஆண், பெண் பறவைகளும் அத்தோடு பிரிந்து தனித்தனியே சென்று விடுகின்றன.

### அழிவை நோக்கி சிட்டுக் குருவிகள்

கடந்த சில பத்தாண்டுகளுக்கு முன்பு வரை திரும்பிய திசை எங்கும் கீச் கீச் என்று சிறகடித்துப் பறந்து கொண்டிருந்த சிட்டுக் குருவிகள் இன்றளவில் வெகுவாகக் குறைந்துள்ளன. எமது வீடுகளிலும், வீட்டிற்கு முன் நின்ற மரங்களிலும் கூடுகட்டி வாழ்ந்த சிட்டுக்கள் இன்று மாயமாய் மறைந்துள்ளன. இந்தக் கட்டுரையை வாசித்துக் கொண்டிருக்கும் தம்பி தங்கைகளே! உங்களிடம் கேட்கின்றேன். உங்களில் எத்தனை பேர் சிட்டுக் குருவியை நேரில் கண்டிருக்கிறீர்கள்? எனக்குத் தெரிந்த அக்கம் பக்கத்திலுள்ள சிறுவர்களிடம் சிட்டுக் குருவியைக் கண்டிருக்கிறீர்களா? என்று கேட்டுப் பார்த்தேன். இல்லை என்பதுதான் அவர்களது பதில்.

ஆம்! உலகில் அழிந்து செல்லும் உயிரினங்களின் வரிசையில் சிட்டுக் குருவியையும் உள்ளடக்கியிருக்கின்றார்கள். இந்தியாவின் பறவையியல் அறிஞரான சலீம் அலி அவர்கள்தான் முதன் முறையாக சிட்டுக் குருவிகளைப் பற்றி ஆய்வு செய்து அதனுடைய அழிவைச் சுட்டிக் காட்டினார். அவரைத் தொடர்ந்து வி.விஜயன் என்ற பறவையியலாளர் தொடர்ந்து பல ஆய்வுக் கட்டுரைகளை ஆங்கிலத்தில் வெளியிட்டு சிட்டுக் குருவிகளைக் காக்க தொடர் முயற்சிகள் எடுத்து வருகிறார். இதன் பிறகுதான் உலகம் இதில் கவனம் செலுத்த ஆரம்பித்தது.

### அழிவுக்கு என்ன காரணம்?

சிட்டுக் குருவிகளின் அழிவுக்குப் பல காரணங்கள் சொல்லப்படுகின்றன. அவற்றுள் முக்கியமானது வேளாண்மை நிலங்களில் விவசாயிகள் கணக்கின்றிக் கொட்டும் செயற்கை இரசாயன பூச்சிகொல்லி மருந்துகளே. இவ் இரசாயனக் கலவைகளை தானியங்கள் மீது தெளிப்பதால், அதனை உண்ணும் சிட்டுக் குருவிகள் இறந்து விடுகின்றன அல்லது அவ்விரசாயனங்களால் சிட்டுக்குருவிகள் இனப் பெருக்கம் செய்ய முடியாமல் மலட்டுத் தன்மையை அடைகின்றன. அதையும் மீறி முட்டையிட்டாலும் அந்த முட்டை போசணை அற்றதாகவும் முட்டையின் ஓடு கடினத்தன்மை இன்றி இருப்பதால் எளிதில் உடைந்து விடுவதாலும் இனப் பெருக்கம் பாதிக்கப்பட்டு இனம் அழிவுக்குள்ளாகி வருகிறது என்பதே சிட்டுக் குருவி தொடர்பான ஆராய்ச்சியாளர்கள் சொல்லும் கருத்து.

சிட்டுக் குருவிகளின் இரண்டாவது முக்கிய எதிரி தொலைபேசி கோபுரங்கள். நகரப் புறங்கள், கிராமப் புறங்கள் என்று எல்லாத் திக்கிலும் வானைத் தொடுமளவு செல்போன் கோபுரங்களை நிறுத்தி வைத்திருக்கின்றனர். இதிலிருந்து வெளிவரும் மின்காந்தக் கதிர் வீச்சினால் சிட்டுக் குருவிகள் உள்ளிட்ட பல பறவைகள் அழிவுக்குள்ளாகி வருகின்றன. செல்போன் கோபுரங்களின் எண்ணிக்கை அதிகரிக்க அதிகரிக்க சிட்டுக் குருவிகளின் எண்ணிக்கை வெகுவாக குறைந்து செல்கின்றது. இந்த இரண்டு காரணிகளையுமே பிரதானமானவையாக ஆய்வாளர்கள் முன்வைக்கின்றனர்.

### இவற்றைப் பாதுகாப்பதற்கான ஏற்பாடுகள்

இதேநிலை தொடர்ந்தால், வருங்காலங்களில் குழந்தைகளுக்கு சிட்டுக் குருவிகளை இணையத்தில் தேடித் தான் காட்ட வேண்டிவரும். எனவே, சிட்டுக் குருவி இனங்களைக் காப்பாற்ற அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பறவை ஆராய்ச்சியாளர்களும் ஆர்வலர்களும் கோரிக்கை வைத்துள்ளனர். இதற்காக சில நிறுவனங்களும் முன்வந்துள்ளன. இதற்காகத்தான் உலகம் முழுவதும் மார்ச் 20 ஆம் திகதியை சிட்டுக் குருவிகள் தினமாக கொண்டாடுகிறார்கள். இன்னும் பல நாடுகள் அஞ்சல் முத்திரைகளிலும் சிட்டுக் குருவிகளின் படங்களை வெளியிட்டுள்ளன. மேலும் Nature Forever Society என்கின்ற நிறுவனம் சிட்டுக் குருவிகளைக் காப்பாற்ற, அவற்றைப் பற்றி மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தபல முயற்சிகளை எடுத்து வருகிறது.



19 ஆம் பக்கம் பார்க்க...



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அறிவு

எம்.ஏ. ரஹ்மான்

ஒரு சமயம் பத்து அறிவாளிகள் கலீபா அலி (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களிடம் வந்து, ''தங்களிடம் ஒரு கேள்வியைக் கேட்பதற்கான அனுமதியைக் கோருகின்றோம்'' என்றார்கள்.

''உங்களுக்கு பூரண உரிமை இருக்கின்றது'' என்று கலீபா அலி (ரழியல்லாஹு அன்ஹு) பதிலளித்தார்கள்.

''அறிவிலும் செல்வத்திலும் சிறந்தது எது? தயவு செய்து எங்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனியே வெவ்வேறு பதில்கள் தர வேண்டும்'' என அவர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

கலீபா அலி (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் பின்வரும் பத்து பதில்களையும் அவர்களுக்குக் கூறினார்கள்:

1. அறிவென்பது இறைத் தூதர்களின் மரபுரிமைச் சொத்து. செல்வம் அரசர்களுடைய வழி வந்த சொத்து. எனவே, அறிவு செல்வத்திலும் பார்க்க மேலானது.
2. நீங்கள் செல்வத்தைப் பாதுகாக்க வேண்டும். ஆனால், அறிவு உங்களைப் பாதுகாக்கின்றது. எனவே, அறிவு சிறந்தது.
3. செல்வத்தை உடைய ஒருவனுக்கு அநேக எதிரிகள் இருப்பார்கள். அறிவுடையவனுக்குப் பல நண்பர்கள் இருப்பார்கள். எனவே, அறிவு சிறந்தது.
4. அறிவு சிறந்தது. ஏனெனில், அறிவை விநியோகிக்கும்போது அது பெருகுகின்றது. ஆனால், செல்வத்தை விநியோகிக்கும்போது அது குறைகின்றது.
5. அறிவாளி பெருந்தன்மையுடன் நடந்து கொள்பவராகவும் செல்வந்தன் கஞ்சத்தனத்துடன் நடந்து கொள்பவராகவும் காணப்படுவதால் அறிவு சிறந்தது.
6. அறிவு திருட்டுப் போக மாட்டாது. செல்வம் திருட்டுப் போகும். எனவே, அறிவு சிறந்தது.
7. கால ஓட்டத்திலே அறிவு பழுதடைவதில்லை. ஆனால், கால ஓட்டத்திலே செல்வம் துருப்பிடித்துத் தேய்கின்றது. எனவே, அறிவு சிறந்தது.
8. அறிவு எல்லையற்றது. செல்வத்திற்கு எல்லையுண்டு. அதனைப் பற்றிக் கணக்கு வைத்துக் கொள்ளலாம். எனவே, அறிவு சிறந்தது.
9. அறிவு மனதை பிரகாசப்படுத்துவதிலும் செல்வம் மனதை இருளடையச் செய்வதிலும் அறிவே சிறந்தது.
10. அறிவே சிறந்தது. ஏனெனில், அறிவு நமது இறை தூதருக்கு அருளிரக்கத்தை ஊட்டியது. இறைவனை நோக்கி, ''அல்லாஹ், உன்னை நாங்கள் துதிக்கின்றோம். நாங்கள் உன்னுடைய ஊழியர்கள் என்று பெருமானார் கூறினார்கள். ஆனால், மிகுந்த செல்வத்தை அனுபவித்த மன்னர்கள் தற்பெருமை வசப்பட்டுத் தங்களையே கடவுள், தலைவர்களாகப் பிரகடனப்படுத்தினார்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# மாணவனே நீ எழுந்து வா!!!

மாணவனே!
உன் ஆளுமைக்கு எடை போட
உன் இலட்சியத்தில் நிலைத்திட
உன் வாழ்க்கையில் வெற்றி பெற
மாணவனே நீ
எழுந்து வா!

சத்தியமாய்... நித்தியமாய்...
உன் தாயின் கனவை நனவாக்க
உன் மனசாட்சியில் ஆட்சியை
நிலை நிறுத்த
மாணவனே நீ
எழுந்து வா!

காலம் வெருண்டோடுகிறது
நீ உன் தோல்விக்கு அஞ்சாதே
இம்மையின் வெற்றிக்காகவும்
மறுமையின் வெற்றிக்காகவும்
மாணவனே நீ
எழுந்து வா!

**ஏ. டபிள்யூ. வஸீரா**
**நிக/நம்முவாவ மு.ம.வி.**
**நம்முவாவ**

# நீரே உனக்காய்...

இரு கரம் ஏந்துகிறேன்
நீருக்காய்
உயிர்போகும் நேரத்தில்
என் தாகத்தை தீர்த்த
என் உயிர் தோழனான
நீரே உனக்காய்...

**எப். இபாமா**
**பெலந்தை மு.வி.**



# சான்றோர் வாக்கு



01. ''விமர்சனம் உப்புப்போல் கரைவதாகும். அது கரடுமுரடும் கசப்புமாகும். ஆயினும் கறியின் நற்சுவைக்கு உப்பு அவசியமாகும். அவ்வாறே சகல விமர்சனங்களும் உங்கள் பயணத்தின் வெற்றிக்கு முக்கிய பங்களிப்பினைச் செய்கின்றன.''

*(வின்ஸ்டன் சேர்ச்சில் - முன்னாள் பிரித்தானிய பிரதமர்)*

02. ''கூடைப் பந்தாட்டத்தில் எனக்கு 9000 இற்கும் மேற்பட்ட 'கோல்' அடிகள் தவறியுள்ளன. 300 இற்கும் அதிகமான போட்டிகள் தவறியுள்ளன. 26 தடவைகள் வெற்றியை நெருங்கி வெற்றிகள் தவறியுள்ளன. இவ்வாறு எவ்வளவுதான் நான் தோல்வியுற்றாலும் இறுதியில் அவை யாவும் எனது வெற்றிக்குக் காரணமாக அமைந்தன.''

*(மைக்கல் ஜோர்டன் - உலகப் புகழ்பெற்ற கூடைப் பந்து வீரர்)*

03. ''நீங்கள் பிறந்தது ஏழையாக எனின், அது உங்களது தவறல்ல. ஆயினும், நீங்கள் ஒரு நாளில் ஏழையாக மரணித்தால் அது உங்களது தவறேதான்.''

*(பில்கேட்ஸ் - மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் அதிபதி, உலகின் முதல்நிலை செல்வந்தர்)*

04. ''யதார்த்தத்தின்பால் அணுகக்கூடிய சிறந்த வழி அதன்பால் அணுகுவதற்கான உண்மையான தேவையாகும்.

*(அரிஸ்டோடில் - கிரேக்க தத்துவ ஞானி)*

05. ''யாதாயினும் ஒரு காரியத்தைச் சரியாகத் திட்டமிட்டு அக்காரியம் வெற்றிகரமாக முடிவுறும் வரை ஒரு நாளும் வெற்றியளிக்காத காரியமாகவே நான் அதனைப் பார்க்கின்றேன்.''

*(நெல்சன் மண்டேலா - முன்னாள் தென்னாபிரிக்க ஜனாதிபதி)*

06. ''நான் எவ்வளவு கஷ்டப்பட்டு வேலை செய்தாலும் தோல்வியடைந்த சந்தர்ப்பங்கள் பல உண்டு. ஆயினும், அதனால் சலிக்காது மென்மேலும் கூடுதலாக கஷ்டப்பட்டு பணியாற்றி வெற்றியினை அடைதல் என்னிடமுள்ள இலக்கு ஆகும்.''

*(ஸ்ரீவ் ஜொப்ஸ் - அப்பிள் நிறுவனத்தின் முதன்மை நிறைவேற்று உத்தியோகத்தர்)*

07. ''உறக்கத்தில் வருவது கனவல்ல; உறங்கவிடாமல் செய்வதுதான் கனவு.''

*(அப்துல் கலாம் - இந்தியக் குடியரசின் முன்னாள் ஜனாதிபதி)*

**ஸஜ்தா அப்துஸ் ஸமத்**
**மட்/ ஹிதாயா ம.வி.**
**மீராவோடை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருதய நோய்க்கு மருந்து

இமாம் ஹஸன் அல்பஸரி (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:

ஒரு வணக்கசாலியான வாலிபர் ஒருவருடன் பஸரா நகரத்தின் கடைவீதியில் சென்று கொண்டிருந்தேன். வழியில் மருத்துவர் ஒருவர் நாற்காலியில் அமர்ந்து கொண்டிருந்தார். அவரைச் சூழ ஆண்களும் பெண்களும் சிறுவர்களும் குழந்தைகளும் தங்களுக்குரிய நோய்களைக் கூறி மருந்தைப் பெற்றுச் சென்றனர்.

என்னுடன் வந்த வாலிபர் அந்த மருத்துவரின் அருகில் சென்று ''மருத்துவரே! பாவங்களை நீக்கி இருதய நோயை குணப்படுத்தும் மருந்து உங்களிடம் இருக்கிறதா?'' என்று கேட்டான். அதற்கு அவர் ''ஆம், இருக்கிறது. இதோ! என்னிடமிருந்து பத்து விடயங்களை எடுத்துக் கொள்'' என்று கூறி பின்வருமாறு விளக்கினார்:

'பணிவு' எனும் மர வேருடன் 'ஏழ்மை' எனும் மர வேரை எடுத்து 'தௌபா' எனும் கடுகைச் சேர்த்து 'திருப்தி' என்ற உரலில் அதை போட்டு 'போதும் என்ற மனம்' கொண்ட உலக்கையினால் அதனை இடித்து பொடியாக்கி 'பயபக்தி' என்ற பாத்திரத்தில் அதனைப் போட்டு 'நாணம்' என்ற தண்ணீரை அதில் ஊற்றி 'நேசம்' என்ற நெருப்பைக் கொண்டு அதனைக் கொதிக்க வை. பிறகு 'நன்றி' எனும் கோப்பையில் அதனை ஊற்றி 'ஆதரவு' என்ற கரண்டியால் அதனை எடுத்து நீ அருந்தி வந்தால் இம்மை மற்றும் மறுமையின் நோய்களிலுமிருந்தும் நீங்கி இன்பம் பெறுவாய்.

**இக்பால் ஜெஸா**
**சுமையா பெண்கள் அரபுக் கல்லூரி**
**கிண்ணியா**




# வினாக் கொத்து

1. மனித மூளை வாழ்நாளில் சேகரிக்கும் செய்திகள்? 10 கோடி
2. யூதர்களின் புனித நூல்? தால்முட்
3. இந்தியாவையும் சீனாவையும் பிரிக்கும் கோடு? மன்மோகன் கோடு
4. ஐரோப்பாவின் கடைசிக் குழந்தை என அழைக்கப்படும் நாடு? ரஷ்யா
5. உலகின் அதிகூடிய மொழிகளில் அச்சிடப்பட்ட நூல்? பைபிள்
6. பூட்டானின் தேசிய பறவை? காகம்
7. இரண்டு தேசிய கீதங்களைக் கொண்ட நாடு எது? அவுஸ்திரேலியா
8. சிவப்பு எறும்பின் கொடுக்கில் அமைந்துள்ள அமிலம்? பார்மிக் அமிலம்
9. 1 கிலோ கிராம் பட்டு நூலை பெற எத்தனை பட்டுப் பூச்சிகளை அழிக்க வேண்டும்? 15,000 பட்டுப் பூச்சிகள்
10. வாலிபர் தினம் கொண்டாடும் நாடு? ஜப்பான்

**எம்.எம்.எப். ஹப்ஸா**
**அந்நூர் மத்திய கல்லூரி**
**பாணகமுவ**



# சிந்தனைக்காக சில வரிகள்

பிறர் துன்பத்தில் இன்பம் காணாதே

உன் துன்பத்தில் இன்பம் காணும் சந்தர்ப்பம் பிறருக்கு ஏற்படலாம். ஏனெனில், உன் வாழ்க்கை இன்னும் முடியவில்லை.

பொறாமை கொள்ளாதே

தீ விறகை எரிப்பதுபோல பொறாமை ஈமானை எரித்து விடும். சிலவேளை உன்னையே அழித்து விடும்.

கோபம் கொள்ளாதே, புறம் பேசாதே, கோள் சொல்லாதே

இவையனைத்தும் அல்லாஹ் விரும்பாத செயல்களாகும்.

சுயநலமாக நடக்காதே

தக்க சந்தர்ப்பத்தில் உனக்கு அது சாதகமாக அமையலாம். ஆனால், ஒரு நாளாவது உனக்கு எதிராக அது சாட்சி சொல்லும்.

அநியாயம் செய்யாதே

ஏனெனில், மறுமையில் அது உனக்கு இருளாய் அமையும்.

**அஸ்வத் றிப்கா ஷீம்**
**சுமையா பெ.அ.க.**
**கிண்ணியா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# முக்கிய தகவல்கள்

- வனவாசம் எனும் நூலை கவிஞர் கண்ணதாசன் எழுதினார்.
- சிலப்பதிகாரம் எனும் நூலை இளங்கோவடிகள் எழுதினார்.
- மகாபாரதம் எனும் நூலை வில்லிபுத்தூர் எழுதி னார்.
- உலகிலே மிகப் பெரிய கப்பல் குயின் எலிசபெத்.
- உலகின் மிகப் பெரிய தனி இலை உள்ள தாவரம் இராட்சத நீல அல்லியாகும். (இலையின் நீளம் 2 சென்றி மீற்றர்)
- இலங்கையில் பறக்கும் தட்டு சஞ்சாரம் 2002 ஆம் ஆண்டு மே மாதம் பிரபல்யமானது.
- இந்தியாவின் சுவிட்ஸர்லாந்து என காஷ்மீர் அழைக் கப்படுகின்றது.
- பித்தப்பை இல்லாத மிருகம் ஒட்டகம் ஆகும்.
- எறும்பின் உடம்பில் போமிக் அமிலம் காணப்படு கின்றது.

**ஆர். றஸ்மி ஹஸன்**
**தேசிய பாடசாலை**
**ஓட்டமாவடி**

# தெரிந்து கொள்ளுங்கள்



- கைக்கடிகாரத்தில் உள்ள உலோகம் செக்கனுக்கு 32768 தடவைகள் அதிர்கிறது.
- மகிழ்ச்சியான விடயத்தை நோக்கும்போது கண்ணின் விழித்திரை 45 வீதம் அதிகமாக விரிகின்றது.
- கண் சிமிட்டுவதால் சராசரி ஒரு மனிதன் நாளொன் றுக்கு அரைமணி நேரம் கண்களை மூடியிருக்கின் றான்.
- பூமியின் கடற்பரப்பில் நீரில் கரைந்த நிலையில் 7 அரை மில்லியன் தொன் தங்கம் உள்ளது.
- புராதன உரோம, சீனா, ஜேர்மன் சமூகங்கள் சிறு நீரை வாய் கொப்பளிக்க பயன்படுத்தினர்.
- மனித உடலில் தானாக குணமடைய முடியாத பாகம் பற்கள்

**றீம் றய்யாஷ்**
**ஓட்டமாவடி**

# அறிவியல் துளிகள் சில

- கொகோ செடியின் தாயகம் எது? தென் ஆபிரிக்கா
- உலக நாடுகளில் பெற்றோலியத்தை அதிகம் ஏற்று மதி செய்யும் நாடு எது? சவூதி அரேபியா
- ஒரு நோபல் பரிசினை எத்தனை பேருக்கு பகிர லாம்? 03 பேருக்கு
- கின்னஸ் புத்தகம் எப்போது வெளிவந்தது? 1955 ஆம் ஆண்டில்
- பசுக்கள் அதிகமுள்ள நாடு எது? இந்தியா
- மிக நீண்ட ஆயுள் கொண்ட உயிரினம் எது? நீல திமிங்கிலம் (500 வருடங்கள்)
- இலங்கையில் முதல் முதலில் அஞ்சல் முத்திரை எப்போது வெளிவந்தது? 1857 ஆம் ஆண்டில்
- உலகின் தானியக் கிடங்கு எனப்படும் நாடு யாது? கனடா
- புல் இனத்தின் மிகப் பெரியது எது? மூங்கில்

**மொஹமட் முஸ்பிக்**
**வெலம்பொட**

# ஆசியாவின் சிறப்புத் துளிகள்

- உலகிலேயே மிக பெரிய கண்டம் - ஆசியா
- மக்கள் தொகை அதிகம் கொண்ட நாடு - சீனா
- மிக உயரமான சிகரம் - எவரெஸ்ட்
- கடல் மட்டத்தில் இருந்து மிகத் தாழ்ந்த பகுதி - சாக்கடல்
- உலகில் விவசாயத்தை ஆரம்பித்தது - மேற்காசியா
- எழுத்துருவாக்கம் - சுமேரியா (ஈராக்)
- வெடிமருந்து கண்டுபிடிப்பு - சீனா
- பூச்சியம் அறிமுகம் - இந்தியா
- அச்சுக்கலை அறிமுகம் - சீனா
- குதிரைகளை வளர்க்கத் துவங்கியது - மத்திய ஆசியா
- உலகில் மிகப் பெரிய எண்ணெய் உற்பத்தி செய் யும் நாடு - சவூதி அரேபியா

**உமாமா பின்த் முஸம்மில்**
**வடதெனிய**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவுக் களஞ்சியம்

ஏ.ஆர்.எம். ஜிப்ரி
அதிபர்
களு/முஸ்லிம் மத்திய கல்லூரி, களுத்துறை



இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் முஸ்லிம் சேவையில் இடம்பெறும் அறிவுக் களஞ்சிய நிகழ்ச்சி வினாக்களின் தொகுப்பு

## முதல் சுற்று (இஸ்லாம் தொடர்பான வினாக்கள்)

1. 'குப்ர்' என்ற அரபுச் சொல்லின் தமிழ்க் கருத்து யாது?
2. இமாம் திர்மிதி (ரஹிமஹுல்லாஹ்) அவர்களின் ஜாமிஉத்திர்மிதி எனும் கிரந்தத்திலுள்ள ஹதீஸ் களின் எண்ணிக்கை யாது?
3. ஒருவர் மரணித்த பின்னர் அவர் விட்டுச் செல் லும் எல்லாச் சொத்துக்களும் 'வாரிசுச் சொத்து' என அழைக்கப்படும். இதன் அரபுப் பதம் என்ன?
4. உமையாக்களின் ஆட்சியின் தலைநகர் எது?
5. அப்பாஸிய ஆட்சி ஸ்தாபிக்கப்பட்டபோது அபூ ஜஃபர் அல் மன்சூர் எந்த நகரத்தைத் தலைநகராக் கினார்?
6. அல்குர்ஆனின் 97 ஆவது அத்தியாயம் 'அல்கத்ர்' ஆகும். இதன் தமிழ்க் கருத்து யாது?
7. நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர் கள் கலந்து கொண்ட யுத்தங்கள் எத்தனை?
8. முஹம்மத் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல் லம்) அவர்கள் ஆயிஷா நாயகியவர்களை மணம் புரிந்த மாதம் எது?
9. ஹஜ்ஜின் வாஜிபுகள் எத்தனை?
10. மழையின்மை, பஞ்சம் காரணமாக மக்கள் வறு மையில் வாடிக் கொண்டிருந்த காலத்தில் சிரியா வில் ஹேர்குலிஸ் என்பவன் தலைமையில் இலட் சக்கணக்கான உரோமப் படையினர் திரண்டு முஸ் லிம்களைத் தாக்கியழிக்க ஆயத்தமாகிய செய்தி பெருமானார் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல் லம்) அவர்களுக்கு எட்டியது. அவ்வேளையில் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் பணம் படைத்த முஸ்லிம்கள் மற்றும் ஏழை முஸ் லிம்களையும் ஆயத்தப்படுத்த வசூல் செய்ய உத் தரவிட்டார்கள். இதுதான் இஸ்லாத்தின் முதலாவது வசூல் ஆகும். இதில் அபூபக்ர் (ரழியல்லாஹு அன்ஹு), உமர் (ரழியல்லாஹு அன்ஹு), உது மான் (ரழியல்லாஹு அன்ஹு) மற்றும் ஸஹாபாக் கள் மட்டுமல்ல பெண்களும் விதவைமாரும் ஆபரணங்களையும் படைக்குக் கொடுத்துதவினர். இது எந்த யுத்தத்துக்காக நிகழ்ந்தது?
11. ரூஹுல்லாஹ் என்ற சிறப்புப் பெயருக்குரிய நபி யார்?
12. நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர் கள் இஹ்ராம் கட்டிய நிலையில் மணமுடித்த அன் னையர் யார்?
13. இஸ்லாமிய மாதங்களில் இறுதி மாதத்தின் பெயர் என்ன?
14. 'நாமூஸுல் அஃலம்' எனும் சிறப்புப் பெயரால் அழைக்கப்பட்டவர் யார்?
15. 'ஸூரத்துஸ் ஸலாஹ்', 'உம்முல் குர்ஆன்' என்ற சிறப்புப் பெயர்களால் அழைக்கப்படும் ஸூரா எது?
16. 'பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்' என்பதிலுள்ள மொத்த எழுத்துக்கள் எத்தனை?
17. 'கிதாபுல் உம்மு' எனும் இஸ்லாமிய சட்ட நூலை இயற்றியவர் யார்?
18. அலி (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களுக்கும் ஆயிஷா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களுக்கு மிடையில் நடைபெற்ற யுத்தத்தின் பெயர் என்ன?

---

## இரண்டாம் சுற்று (பொது அறிவு)

1. 1931 இன் டொனமூர் யாப்பின் முக்கியமான நான்கு அம்சங்களாவன; சர்வஜன வாக்குரிமை, பிரதேச வாரியான பிரதிநிதித்துவம், அரசுக் கழகம், நிர்வா கக் குழு முறை என்பனவாகும். இவற்றுள் அரசுக் கழகம் மொத்தம் எத்தனை உறுப்பினர்களைக் கொண்டதாக இருந்தது?
2. 'தோல்வியே அடையாதவன்' எனப் புகழப்பட்ட நெப்போலியன் 1815 ஆம் ஆண்டில் வெலிங்டன் பிரபுவின் படையுடன் தோல்வியடைந்த இடத் தின் பெயரே அந்த யுத்தத்தின் பெயராக சரித்திரத் தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த யுத்தத்தின் பெயர் என்ன?
3. வருமான வரியை அறவிட்ட உலகின் முதலாவது நாடு எது?
4. மருத்துவத் துறையில் FCG என்றழைக்கப்படுவ தன் விரிவான வாக்கியம் எது?
5. இலங்கையில் மிகக் கூடுதலான நிருவாக மாவட் டங்களை உள்ளடக்கிய மாகாணம் எது?

விடைகள் 19 ஆம் பக்கம் பார்க்க...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஷ்ஷெய்க் யூ.எல்.எம். ரிஸ்மி (நளீமி BA)
வளவாளர், தேசிய கல்வி நிறுவகம்

# الشُّهُورُ العَرَبِيَّةُ

| | | |
|---|---|---|
| ١. المُحَرَّم | ٥. جُمادى الأولى | ٩. رَمَضانُ |
| ٢. صَفَر | ٦. جُمادى الآخِرَة | ١٠. شَوَّالٌ |
| ٣. رَبيعُ الأَوَّل | ٧. رَجَبٌ | ١١. ذُوالقَعْدَة |
| ٤. رَبيعُ الآخر | ٨. شَعْبانُ | ١٢. ذُوالحِجَّة |

## التَّدْرِيْبُ ١ رَتِّبْ الشُّهُورَ العَرَبِيَّةَ

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ذُوالقعْدَة | رَمَضانُ | ربيعُ الآخر | شَوَّالٌ | جُمادى الأولى | صَفَر |
| شَعْبانُ | المحَرَّم | رَجَبٌ | رَبيعُ الأَوَّل | جُمادى الآخِرَة | ذُوالحِجَّة |
| ....المحَرَّم ... | ............ | ............ | ............ | ............ | ............ |
| ............ | ............ | ............ | ............ | ............ | ............ |

## التَّدْرِيْبُ ٢ اَكْمِلْ الفَرَاغَ ب((قَبْلَ)) أوْ((بَعْدَ))

| | |
|---|---|
| ١. رَمَضان ............. شَوَّال | ٥. رَمَضان ............ شَعْبان |
| ٢. صَفَر ............... رَبيعُ الأَوَّل | ٦. صَفَر ............ المحَرَّم |
| ٣. ذوالقعْدَة ............ شَوَّال | ٧. جُمادى الآخِرَة ............ رَجَب |
| ٤. جُمادى الآخِرَة ............ جُمادى الأولى | ٨. رَجَب ............ شَعْبان |

## التَّدْرِيْبُ ٣ أَجِبْ عَنْ الأَسْئِلَةِ الآتِيَةِ.

| | |
|---|---|
| ١. مَتَى يَصومُ المسْلمُونَ؟ | ٥. فِي أيِّ شَهْرٍ تبْدَأُ الدِّرَاسَةُ ؟ |
| ٢. مَتَى الحجُّ؟ | ٦. فِي أَيِّ شَهْر تَنْتَهِي الدِّرَاسَةُ؟ |
| ٣. مَا أَوَّلُ شَهْرٍ عَرَبِيٍّ؟ | ٧. فِي أَيِّ شَهْرٍ تَبْدَأ الإخْتِبارات؟ |
| ٤. ما آخِرُ شَهْرٍ عَرَبِيٍّ؟ | ٨. فِي أَيِّ شَهْرٍ تَبْدَأ العُطْلَةُ؟ |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## اِقْرَأْ الفِقْرَةَ , ثُمَّ أَكْمِلْ العِبَارَاتِ.

سَتَبْدَأُ عُطْلَةُ الصَّيْفِ بَعْدَ أُسْبُوعٍ, وَسَيُسَافِرُ الطُّلَّابُ إِلَى الأَهْلِ. سَيُسَافِرُ أَحْمَدُ إِلَى بَلَدِهِ. سَيَقْضِي العُطْلَةَ فِي القَرْيَةِ, لِيُسَاعِدَ وَالِدَهُ وَعَمَّهُ فِي المَزْرَعَةِ., وَعَلِيٌّ سَيُسَافِرُ إِلَى السُّعُودِيَّةِ. لِيَقْضِي العُطْلَةَ بَيْنَ مَكَّةَ وَالمَدِيْنَةِ, وَسَيَعْتَمِرُ, وَيَبْقَى شَهْرا فِي مَكَّةَ بِالقُرْبِ مِنَ المَسْجِدِ الحَرَامِ. وَسَيَبْقَى شَهْرًا بِالقُرْبِ مِن المَسْجِدِ النَّبَوِي. سَيَقْضِيْ عُمَرُ وَأُسْرَتُهُ العُطْلَةَ فِي مِصْرَ, سَيُسَافِرُ بِالبَحْرِ, وَتُسَافِرُ أُسْرَتُهُ بِالجَوِّ. وَسَيَقْضِي الأَيَّامَ الأُوْلَى فِي القَاهِرَةِ, لِيَرَى نَهْرَ النِّيلِ, وَيَزُوْرُ الأَزْهَرَ, وَسَيَقْضِى عَشَرَةَ أَيَّامٍ خَارِجَ القَاهِرَةِ, سَيَزُورُ صَدِيقَهُ أَحْمَدَ فِي قَرْيَتِهِ, وَيُقِيْمُ مَعَهُ فِي مَزْرَعَةِ وَالِدِهِ.

أَحْمَدُ سَيَقْضِي العُطْلَةَ فِيْ .........................................

وَعَلِيٌّ سَيُسَافِرُ إِلَى ...............................................

سَيَقْضِي عُمَرُ وَأُسْرَتُهُ العُطْلَةَ فِي ...............................

وَسَيُسَافِرُ الطُّلَّابُ إِلَى الأَهْلِ فِي ..................................

سَيُسَاعِدُ أَحْمَدُ وَالِدَهُ فِيْ ...........................................

سَيَزُوْرُ عُمَرُ صَدِيقَهُ أَحْمَدَ فِي ......................................

سَيَرَى عُمَرُ نَهْرَ النِّيلِ,وَيُشَاهِدُ .....................................

وَسَيَقْضِى عُمَرُ عَشَرَةَ أَيَّامٍ خَارِجَ ....................................

وَسَيَقْضِي وَعَلِيٌّ العُطْلَةَ بَيْنَ مَكَّةَ وَ ..................................

## اِقْرَأْ النَّصَّ السَّابِقَ مَرَّةً أخرى, ثُمَّ أَجِبْ

١. متى سَيُسافِرُ الطلاب إلى الأهل ؟

٢. لِمَاذَا سَيُسَافِرُ أَحْمَدُ إِلَى بَلَدِهِ؟

٣. وَعَلِيٌّ لِمَاذَا سَيُسَافِرُ وَعَلِيٌّ إِلَى السُّعُودِيَّةِ؟

٤. كَمْ يَوْمًا سَيَبْقَى وَعَلِيٌّ فِي مَكَّةَ؟

٥. كَمْ يَوْمًا سَيَبْقَى فِي المَدِيْنَةِ؟

٦. كَيْفَ سَيُسَافِرُ عُمَرُ إِلَى مِصْرَ؟

٧. كَيْفَ سَتُسَافِرُ أُسْرَتُهُ؟

٨. أَيْنَ سَيَقْضِي الأَيَّامَ الأُوْلَى؟

٩. مَنْ سَيَرَى نَهْرَ النِّيلِ وَيَزُوْرُ الأَزْهَرَ؟

١٠. أَيْنَ يَزُوْرُ عُمَرُ صَدِيقَهُ أَحْمَدَ؟



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## *Assalamu alaikum friends!*

April, the month of vacation, trip and fun is over and friends it's time to get back to our routines. As students, our routines are obviously studying, attending tuitions, sleeping and then again studying ect... the chain goes on, isn't it. Ah! I know! These stuffs are quite boring for fun loving children like you. Yet, my dear brothers and sisters, one thing that you must instill strongly in your minds is that "studying is a part and parcel of your life". It is in your hands to make it either exciting or tedious...

Yes, let's make it the most interesting activity of our lives. Here are some tips, picked up especially for you on "how to study without getting bored".

1. Find a suitable place for study

   One of the most important aspects for studying is finding the right place. Although you don't want to get bored, you want to make sure you are in a place that is free of distraction. Distractions are counterproductive to learning and will actually cause you to become more bored because you are reminded of the things you could be doing other than studying.

2. Don't get too comfortable


   If you are too comfortable in your study environment, you are likely to get distracted, bored, or fall asleep. Avoid lying down when you need to study. You want a chair that supports your back and body, but don't sit in a chair that is too comfortable. You don't want to get bored or sleepy, which will defeat the purpose of your study session.

3. Plan your end goals

   One reason you get bored may be because you have no clear idea of where your study session is going or what you need to accomplish. Plan ahead and have what you want to do in your mind before you begin to study. Lay out what you know you need to get accomplished and how long you need to take to complete it

4. Mix up your topics

To help you not get bored while you are studying, you should change up the topics that you are studying. It is unlikely that




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

you only have one subject to study for at a time, so mix up what you study every half an hour to an hour or so.

5. Pick your most active time of day

   Studying during the time of day where you are most awake and active can help you study for longer periods of time without getting bored. You will be more aware and more likely to take in what you are studying as well.

6. Take breaks

   Sitting in the same position for hours, especially when you are studying for a big exam, can lead to massive bouts of boredom. Try breaking it up with small breaks every hour or so. If you have been sitting down for a long time, take a stretching break. Reward yourselves every hour with a 10 minute basketball break or take a short jog around the block.

7. Make it fun
8. Reward yourself
9. Take notes as you go
10. Avoid electronics

***Courtesy: http://www.wikihow.com/Study-Without-Getting-Bored***

# Hadith of the month

**The Prophet (Sallallahu 'Alaihi Wa Sallam) said, "Whoever takes a bath on Friday, purifies himself as much as he can, then uses his (hair) oil or perfumes himself with the scent of his house, then proceeds (for the Jumua prayer) and does not separate two persons sitting together (in the masjid), then prays as much as (Allah has) written for him and then remains silent while the Imam is delivering the Khutba, his sins in-between the present and the last Friday would be forgiven."**

## *Laugh* a while:



**Father:** Doctor! My son has swallowed my pen. What should I do?

**Doctor:** Use a pencil instead

**Father:** ???

## Your Corner





**Sithy Rahma Anfal**
**Beruwala**

Friendship is a bond between two living beings. Friendships are formed irrespective of age, status, caste, creed and gender. A child, a teenager, a young man or even an old man can find a friend according to his feeling and wishes. True friends share feeling such as happiness, sadness and affection. Friends should be trustworthy and loyal to each other. Caring and Sharing make a friendship healthy and it uplifts the lives of friends and it will give colour to life. There is a proverb that "A friend in need is a friend indeed". Play wrights have written plays on friendship, lyricists have woven lyrics on friendship, poets have written poems on friendship and novelists have made friendship the theme of their novels



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# The value of Reading

Reading is a very useful activity to pass time. "Reading makes a full man" is an epithet of Francis Bacon. There is a truth in this great saying. The habit of reading is highly advantageous to anyone. Reading helps us to acquire knowledge on various subjects. Apart from that we can get mental satisfaction by reading. As books are written by great people, it is apparent that reading is a useful hobby.


**M.N.M Minhaj**
**Grade 9**
**K/Denu/As- Siraj Boys College**
**Dellenga, Gelioya**

# My Pet

- My pet is a kitty its name is Mani.
- Mani is very playful. It likes milk and fish very much.
- It runs fast and plays with me.
- When I throw a ball Mani brings it back to me.
- Mani jumps onto my lap when I come home after school.
- When Mani is happy it wags its tail. It is very faithful towards me.
- I love Mani very much.

**M.N.F. Safna**
**Grade: 10**
**WP/MT/Pelenda M.V.**

# good thoughts to think and do



1. You will never reach your destination if you stop and throw stones at every dog that barks.
2. In the past no one had a watch: But everyone had time. Today, everyone has a watch but no one has time.
3. When life gives 100 reasons to cry; show life that you have 1000 reasons to smile.
4. If you miss an opportunity don't fill the eyes with tears because, it will hide another opportunity in front of you.
5. When you have money you forget who you are, but when you don't have money the whole world forgets who you are.
6. Live as if you were to die tomorrow. Learn as if you were to lean forever.
7. Never blame any day in your life. Good days give you happiness, bad days give you experience and worse days give you lessons.

**M.J Fathima Nishadha**
**1st year**
**Islahiyyah Ladies Arabic College**
**Puttalam**

I'm eagerly waiting for your contributions with comments, stories, poems and essays. The best ones will be published insha Allah.
So write to me at

## I learn every day

A 61/ 5 ,
Zahira Road, Mawanella

Or

Mail me to
aharamenglish@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணங்களின் வண்ணங்கள் - 09

# தரமிருந்தும் இடம்பிடிக்க தவறியவை

சஈட் அஹமட், பதுரியா மத்திய கல்லூரி, மாவனல்லை

எம்.என்.எப். ஸானாஸ், பாத்திமா மகளிர் கல்லூரி, புத்தளம்

எம்.எப். அஹமட், க/உடப்பிடிய அல் ஹுஸ்னா மு.ம.வி, தெல்தோட்டை

அமினா ஸியாம், ரஹ்மானியா ம.வி. வெலிப்பன்னை

எப்.எப். பஸ்னா, க/உடப்பிடிய அல் ஹுஸ்னா மு.ம.வி, தெல்தோட்டை

எம்.ஆர்.எம். ஷவ்வாப், புத்தளம்

எம்.ஆர். றுகாபா, புத்தளம்

வபா றைஹான், மா/ஆமினா தே.பா. மாத்தளை

மர்யம் ரஊப், கொ/ கைரிய்யா மகளிர் கல்லூரி, கொழும்பு 09

எம்.ஐ. ஸிபா, ஸாஹிரா கல்லூரி, கம்பளை

எம்.ஏ.எப். ஆப்ரா, அல் ஹிஜ்ரா ம.வி. குளியாப்பிடிய

எம்.என்.எம். யூனுஸ், ஸாஹிர மத்திய கல்லூரி, புத்தளம்

நிஸ்மா நளீம், ஸாஹிரா தே.பா. மாவனல்ல

பாத்திமா இபாமா, பெலந்த ம.வி. பெலந்த

பாத்திமா நிப்லா கிரி/ அறக்கியால மு.ம.வி. கெக்குணகொல்ல

பாத்திமா ஸாஜிதா கே/ பாபுல் ஹஸன் மத்திய கல்லூரி

## குட்டிக் கதை

சோவியத் ரஷ்யாவில் ஸ்டாலினுக்குப் பிறகு தலைவர் பொறுப்புக்கு வந்தவர் குருஷேவ். இவர், சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் சபையில் பேசியபோது, ''மறைந்த முன்னாள் அதிபர் ஸ்டாலின் பல தவறுகளைச் செய்துவிட்டார். அதன் காரணமாக சோவியத் நாட்டின் முன்னேற்றங்கள் பல துறைகளில் தடைப்பட்டுள்ளன...'' என்று கடுமையாகப் பேசிக் கொண்டிருந்தார்.

அப்போது கூட்டத்திலிருந்தவர்களுள் ஒருவர், ''இப்போது ஸ்டாலினைக் கடுமையாகத் தாக்கிப் பேசும் நீங்கள் அவர் தவறு செய்யும்போது அதனைத் தண்டிக்காமல், ஏன் வாய்மூடி அமைதியாக இருந்தீர்'' என்று எழுதிய காகிதத்தை, பெயரின்றிக் கொடுத்து அனுப்பியிருந்தார்.

எழுதியவர் பெயர் இல்லாமல் இருந்த அந்தக் காகிதத்தைக் காட்டி, ''இதை அனுப்பியவர் யார்?'' என்று கோபமாகக் கேட்டார் குருஷேவ். கூட்டத்தினரிடமிருந்து எந்தவித பதிலும் இல்லை. மீண்டும் மீண்டும் கேட்டார்.

பின்பு, இந்தத் துண்டுக் காகிதத்தை அனுப்பியவர் என்ன காரணத்திற்காக இப்போது மௌனமாக இருக்கிறாரோ அதே காரணத்திற்காகத்தான் தானும் ஸ்டாலின் காலத்தில் மௌனமாக இருந்ததாகக் கூறினார் குருஷேவ்.

---

**08 ஆம் பக்கத் தொடர்...**

குருவிக் கூடுகளைத் தயாரித்து இலவசமாக வீடுக ளின் முன் அவற்றைத் தொங்கவிட்டு வருகின்றனர். BCIL-ZED Foundation மற்றும் Zoo Authority of Karnataka நிறுவனங்கள் சேர்ந்து GUBBIGOODU (குருவிக்கூடு) என்ற ஒரு முன்மாதிரி முயற்சியை தொடங்கியுள்ளன. இந்த நிறுவனங்கள் ஒவ்வொருவரும் தங்கள் வீடுகளில் குரு விக்கூடுகளை அமைக்க ஊக்கம் அளிக்கின்றன.

**நீங்களும் முயற்சிக்கலாம்**

அழிந்து போகும் ஓர் இனத்தை வாழவைக்க உங் களாலும் முடியும். பாதுகாப்பான முறையில் ஒரு சிறிய மண் முட்டியையோ அல்லது கார்போட் பெட்டியையோ சிறிதாகத் துளையிட்டு அதனுள் வைக்கோலை வைத்து உங்கள் வீட்டு வரவேற்பறையிலோ, வீட்டு முன் சுவற் றிலோ அல்லது மரத்திலோ தொங்க விடுங்கள். பின் னர் அதனருகில் நெல், பருப்பு, பயறு, சோளம் ஏதா வதையும் சற்று தண்ணீரையும் வையுங்கள். ஒரு சில வாரங்களில் உங்கள் வீட்டுக்கும் சிட்டுக் குருவிகள் வந்து செல்லும். உங்களாலும் அவற்றை நேரில் பார்த்து ரசிக்கலாம். அல்லாஹ்வின் மற்றுமோர் அற்புதப் படைப் பில் உள்ள அதிசயங்களைப் பார்த்து உணரலாம். முயற் சித்துப் பாருங்கள்.

---

**அறிவுக் களஞ்சியம்...**

**13 ஆம் பக்கத் தொடர்... விடைகள் (இஸ்லாம்)**

1. மறுத்தல் (நிராகரித்தல்)
2. 4800
3. வராஸத்
4. டமஸ்கஸ்
5. பக்தாத்
6. கண்ணியமிக்கது
7. 27, 35
8. ஷவ்வால்
9. 6
10. தபூக் யுத்தம்
11. நபி ஈஸா (அலைஹஸ்ஸலாம்) அவர்கள்
12. அன்னை மைமூனா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்கள்
13. துல்ஹஜ்
14. ஜிப்ரீல் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள்
15. ஸூரதுல் பாத்திஹா
16. 19
17. இமாம் ஷாபிஈ (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள்
18. ஜமல் யுத்தம் (ஒட்டகை யுத்தம்)

**பொது அறிவு**

1. 61 (நியமனம் 8, அரச அலுவலர் 3, வாக்களிப்பு மூலம் 50)
2. வாட்டர்லூ யுத்தம்
3. இங்கிலாந்து
4. Electro Cardio Graph
5. வடமாகாணம் (யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல் லைத்தீவு, மன்னார், வவுனியா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை வரலாற்றில் முஸ்லிம்களின் பங்களிப்புக்கள்

தொடர் - 08

## தம்பதெனிய காலம்

அஷ்ஷெய்க் எம். நவாஸ் சனூர்டீன் (நளீமி MA)
உதவி அதிபர்
க/அல்மனார் தே.பா. ஹந்ததெஸ்ஸ
வளவாளர், தேசிய கல்வி நிறுவகம்

கலிங்கமாகன் பொலன்னறுவையைக் கைப்பற்றி 1215-1235 வரை ஆட்சி செய்தான். இலங்கையின் அரசியல், நாகரிக வரலாற்றில் தேய்வு நிலைக்குரிய காலமாக இது அமைந்தது. இலங்கையின் தலைநகர் தென் மேற்கு நோக்கி நகர ஆரம்பித்தது. இக்காலப் பகுதியில் இலங்கையின் அரசியலில் தென் இந்திய பாண்டியப் பேரரசும் விஜயநகரப் பேரரசும் அதிக செல்வாக்குச் செலுத்தியுள்ளன.

கலிங்கமாகன் பொலன்னறுவையில் இருந்த நேரத்தில் இலங்கையின் பல பகுதிகளிலும் பிரதேச ஆட்சியாளர்கள் பலர் இருந்துள்ளனர். இவ்வகையில் உருகுணையில் புவனேகபாகு என்பவனும், மனிபே பகுதியில் தளபதி சங்க என்பவனும் யாப்பஹுவையில் தளபதி சுபாவும், தம்பதெனியவில் விஜயபாகுவும் ஆட்சி செய்தனர். இவர்கள் தமது பொது எதிரியான கலிங்கமாகனை தோல்வியடையச் செய்ய ஒன்றிணைந்த கூட்டு முயற்சி எதனையும் மேற்கொள்ளவில்லை. எனினும், விஜயபாகு மாகனை ஒடுக்குவதில் ஓரளவு வெற்றி கண்டான் எனலாம். விஜயபாகுவின் அரசியல் வாழ்வை அவதானிக்கும்போது அவன் இரத்தினபுரி மாவட்டத்தில் இருந்து தன் வாழ்வை ஆரம்பித்து படிப்படியாக முன்னேறி மாயாரட்டை முழுவதையும் தனது ஆட்சியின் கீழ் கொண்டு வந்தான். தம்பதெனியவை தலைநகராக ஆக்கினான். பொலன்னறுவைக்கு அண்மையில் அமையாது பல மைல் தொலைவில் இருந்த தம்பதெனியவை இவன் தலைநகராக தெரிவு செய்தமைக்கு அவன் மாகனோடு போர் நடத்த திட்டமிட்டிருந்தமையே பிரதான காரணம் என கலாநிதி அமரதாஸ லியனகமகே குறிப்பிடுகிறார்.

கி.பி. 1232-1236 வரை நான்கு ஆண்டுகளே 3 ஆம் விஜயபாகு தம்பதெனியவில் இருந்து ஆட்சி செய்தான். அவன் ஆரம்பித்து வைத்த ஆட்சி மரபு 1270 வரை நீடித்தது. இந்த வகையில் 1232-1270 வரையான காலப் பிரிவே இலங்கையின் வரலாற்றில் தம்பதெனிய காலம் என அழைக்கப்படுகின்றது.

தம்பதெனிய காலப் பிரிவில் முஸ்லிம்களின் வரலாறும் பண்பாடும் எவ்வாறு அமைந்திருந்தது என்பதைப் புரிந்து கொள்வதற்கு நாம் மேலே தந்த சுருக்கமான வரலாற்றுப் பின்னணி மிக அவசியமாகும். பொலன்னறுவைக் காலப் பிரிவிலும் அதனைத் தொடர்ந்து தலைநகர்கள் இடமாறியபோதும் வணிக மையத்தலங்களும் மாறத் தொடங்கின. கி.பி. 13 ஆம் நூற்றாண்டில் திருகோணமலைத் துறைமுகம் சர்வதேச வணிகத்தில் முக்கியம் பெறுவதைக் காணலாம். அவ்வாறே, பிரதான நகரங்களாக இருந்த நகரங்கள் பொலிவிழந்து புதிய நகர்கள் உருவாகுவதையும் அவதானிக்கலாம். தலைநகர்களின் இடமாற்றத்தோடு முஸ்லிம்களும் அவர்களது வணிக முயற்சிகளும் இடமாறுவதைக் காணலாம்.

தம்பதெனிய அரசியல் காலப் பிரிவில் முக்கியம் பெறும் விஜயபாகுவே 3 ஆம் விஜயபாகு என்ற சிம்மாசனப் பெயரோடு கி.பி. 1232 இல் அரச கட்டிலேறினான். இம்மன்னனது அரசியல் வாழ்வில் அன்றைய தென்மாகாணக் கரையோர நகர்களில்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்த முஸ்லிம்கள் அதிக செல்வாக்குள்ளவர்களாக இருந்திருக்க வேண்டும். இரத்தினபுரி மாவட்டத்தில் தனது ஆரம்ப காலங்களைக் கழித்தபோதே இவ்வு றவு ஏற்பட்டிருக்கலாம். நாம் இப்படிக் கருதுவதற்கு கலாயோகி ஆனந்த குமாரசுவாமி "Medieval Singhala Arts' எனும் நூலில் தரும் செய்தி ஒன்று ஆதாரமாக அமை கின்றது. அதாவது, 3 ஆம் விஜயபாகு தம்பதெனியவை தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த நேரத்தில் பேரு வளையைச் சேர்ந்த மீராலெப்பை என்ற வணிகத் தலைவர் இந்தியாவில் இருந்து சாலியர் எனும் நெசவா ளர்களை இலங்கைக்கு அழைத்து வந்து உதவினார். ஆனந்த குமார சுவாமி தரும் இத்தகவல் மன்னனுக்கு முஸ்லிம் வணிகத் தலைவர்களுடன் இருந்த உறவைக் காட்டுகின்றது.

விஜயபாகுவுக்குப் பிறகு அவனது மகனான 2 ஆம் பராக்கிரமபாகு (கி.பி. 1236-1270) அரசு கட்டிலேறினான். சூளவம்சம் 2 ஆம் பாகம், பூஜாவசிய என்பன இவனது வரலாற்றைக் கூறும் இலக்கியங்களாகும். தமிழ், சமஸ்கிருதம், சிங்களம், பாளி ஆகிய மொழிகளில் சிறப்புத் தேர்ச்சி பெற்றிருந்தான். 'கலிகால சாஹித்ய' 'சர்வஞ்ஞபண்டித' ஆகிய அடைமொழிகளால் சிறப் பித்து அழைக்கப்பட்டான். 'கவ்சிலுமின' 'விசுத்தி மார்க்க சன்யை' ஆகிய நூல்களின் ஆசிரியரும் ஆவான். இவனது காலப் பிரிவிலேயே மாகனது ஆட்சி முடி வுற்றதெனினும், அது எவ்வாறு நிகழ்ந்தது, அதில் 2 ஆம் பராக்கிரமபாகுவின் பங்கு எத்தகையது என்பதை வரலாறு தெளிவாகக் காட்டவில்லை. கலிங்கமாகன் வரலாற்றுக் குறிப்புகளின்படி கி.பி. 1255 வரை, ஆட்சி செய்த போதிலும் 3 ஆம் விஜயபாகு தம்பதெனிய வில் உறுதியான ஆட்சியை அமைத்தவுடன் மாகனது ஆட்சி மட்டுப்படுத்தப்பட்டது. எனவே, அவனது காலத்தை கி.பி. 1196-1235 வரை, என சிலர் குறிப்பிடு கின்றனர்.

தம்பதெனிய அரசியலில் மிகச் சிறப்புப்பெறும் 2 ஆம் பராக்கிரம



**3 ஆம் விஜயபாகு தம்பதெனியவை தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த நேரத்தில் பேருவளையைச் சேர்ந்த மீராலெப்பை என்ற வணிகத் தலைவர் இந்தியாவில் இருந்து சாலியர் எனும் நெசவாளர்களை இலங்கைக்கு அழைத்து வந்து உதவினார்.**

பாகுவின் இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றைப் பொறுத்தவரையிலும் குறிப்பிடத்தக்க காலப் பிரிவா கும். இவனது காலப் பிரிவிலேயே புகழ் பூத்த அரபு மருத்துவ பாரம்பரியம் இலங்கைக்கு அறிமுகமாகியது. இம்மன்னன் 1258 ஆம் ஆண்டு சொற்களை சரியாக உச்சரிக்க முடியாத தெற்றுப் பேசல் நோய்க்குள்ளானான். இதனால், அரச பணிகளைக் கூட சரியாக நிறைவேற்ற முடியாத நிலைக்குள்ளானான். எனவே, சில காலம் இவனது பிரதம அமைச்சரான தேவபதிராஜா அரச நிர் வாகப் பணிகளை கவனித்தார். பின்னர், இவனது புதல் வனிடம் அப்பணி ஒப்படைக்கப்பட்டது. இந்நேரத் தில், அன்றைய டில்லி சுல்தானாக இருந்த வப்பன் என் பவரிடம் வேண்டிக் கொண்டதற்கிணங்க இந்தியாவின் வட மாகாணமான சிந்துப் பிரதேசத்தின் 'கொப்' (Gop) பகுதியில் இருந்து ஸ்பெயின் வழிவந்த ஒரு மருத்துவர் இலங்கைக்கு அனுப்பப்பட்டார். வைத்தியரத்ன கோபாலமுதலிகேஅன்சார்இப்னுதுவைல்உடையார் என்பது அம்மருத்துவரின் பெயராகும். அவர் வாழ்ந்த 'கொப்' பிரதேசத்தை அடையாளப்படுத்த 'கோபால' என்ற அடைமொழி கொடுக்கப்பட்டது. இவரது வழி வந்த மருத்துவர்களே இலங்கையின் வரலாற்றில் 'வெஹெத்கே முஹாந்திரம்' எனும் பதவியை வகித்த அரச மருத்துவர்களாவர்.

கி.பி. 1270 இல் 2 ஆம் பராக்கிரமபாகுவின் மரணத் தோடு அவனது புதல்வனான விஜயபாகு 4 ஆம் விஜய பாகு என்ற பெயரோடு அரசனாக முடிசூடினான். இந் நேரத்தில், சிங்கள இராணுவத்தின் தளபதியாக இருந்த 'மித்த' என்பவன் மன்னனைக் கொலை செய்து விட்டு ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டான். அந்நேரத்தில், அரசனின் ராஜபுத்திர படைப் பிரிவின் தலைவராக இருந்த 'தாகூர்' எனும் முஸ்லிம் தளபதி மித்தவைக் கொலை செய்து விட்டு ஆட்சியைக் கைப்பற்றி, 4 ஆம் விஜயபாகுவின் சகோதரனிடம் கையளித்தார்.

நாம் இதுவரை நோக்கிய வரலாற்று நிகழ்வுகள் தம்பதெனிய காலப் பிரிவில் அரசர்களுடனும் சமூக வாழ்வுடனும் முஸ்லிம்கள் கொண்டிருந்த நெருக்க மான பிணைப்பைக் காட்டுகின்றது. இப்பிரதேசத்தில் முறைசார்ந்த ஆய்வுகள் மேற்கொள்ளப்படின் இதை விட சிறப்பான முஸ்லிம் வரலாறு அங்கிருக்கும் என் பதே எமது நம்பிக்கையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# நல்ல நண்பன்

ஹஸ்னா பின்த் புஹாரி, தெல்தோட்டை

முஸ்லிம்கள் செறிந்து வாழும் கிராமம் அது. அங்கு முகம்மத் ஹாஜியார் பெரும் செல்வச் செழிப்புடன் வாழ்ந்து வந்தார். அவருக்கு மூன்று பிள்ளைகள். மூத்தவன் பாரிஸ், ஏனைய இருவரும் பெண் பிள்ளைகள். முகம்மத் ஹாஜியார் தன் பிள்ளைகளை ஆங்கில மொழி மூலம் கற்பித்தார்.

மூத்த மகன் பாரிஸ் படித்துக் கொண்டிருந்தான். நல்ல புத்திசாலியும் கூட. பெருமை பொறாமையற்ற உள்ளம். தன்னுடன் படிக்கும் சக மாணவர்களுடன் அன்பாக பழகுவான். தன்னால் முடிந்த சந்தர்ப்பங்களில் அறிவாலும் பொருளாலும் பலருக்கு உதவிகளையும் புரிந்துள்ளான். அவ்வாறு அவனால் உதவி செய்யப்பட்டவர்களில் காமிலும் ஒருவன். காமில் அதே தரத்தில் தமிழ் மொழி மூலம் கற்று வந்தான். காமிலுடைய தந்தை காமிலுக்கு பத்து வயதாக இருக்கும்போதே இறந்து விட்டார். காமிலுடைய தாய் இடியாப்பம் விற்று காமிலைப் படிக்க வைத்தார்கள். காமில் ஒருபோதும் நல்ல ஆடையோ, புதிய சப்பாத்தோ அணிந்ததில்லை. காமிலின் ஏழ்மை பாரிஸை கவலையில் ஆழ்த்தியது. அதனால் பாரிஸ் காமில் மீது அதிக அக்கறை காட்டி வந்தான்.

சாதாரண தரப் பரீட்சை நெருங்கி விட்டது. பாரிஸ் மிக ஆர்வத்துடன் தனது பாட மீட்டலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தான். அவ்வப்போது காமில் பாரிஸின் மனக்கண் முன் வந்து செல்வான். 'காமிலும் ஆங்கில மொழி மூலம் படித்திருந்தால் என்னுடன் சேர்ந்து படித்திருப்பான். பாவம் அவன்' என்று அவன் மனதில் எண்ணற்ற அலைகள் ஓடும்.

ஒருநாள் பாரிஸ் தனது பாடங்களை மீட்டிக் கொண்டிருந்த நேரம் அவனது வாப்பா அவனது அறைக்குள் நுழைந்தார். அவனை அணுகி,

''பாரிஸ் நீங்க பரீட்சை முடிந்து என்ன செய்ய போறிங்க?'' என்று கேட்டதற்கு

''நா மெட்ஸ் செய்யப் போரன்''


''சரி பரீட்சை முடிந்தவுடன் சுற்றுலா ஒன்டு போய் வரலாம்'' என்று வாப்பா சொல்ல,

''அப்ப நாங்க உம்ரா செய்ய போகலாம்'' என்று பாரிஸ் சொன்னாள். முகம்மது ஹாஜியாரும் அதற்கு சரி என்று தலையசைத்தார்.

மறுநாள் பாடசாலையின் இடைவேளை நேரத்தில் தமிழ் மொழிப் பிரிவு நண்பர்களை சந்திக்க சென்றான் பாரிஸ். பாரிஸைக் கண்ட கண்கள் அவனை வரவழைத்தது.

''என்ன பாரிஸ் இந்தப் பக்கம்?'' என்று அவர்களில் ஒருவன் கேட்டான்.

''சும்மாதான் பிரன்ஸ்'' என்று கூறிய பாரிஸ் காமிலை தேடலானான்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பாரிஸ் பரீட்சை முடிந்தவுடன் யுகே வா? இல்ல சிங்கப்பூரா?'' என்று இன்னொரு நண்பன் கேட்டான்.

''ரெண்டுமில்ல. இந்த தடவ நாங்க உம்ரா செய்ய போறம்'' என்று சொல்லி முடிக்க காமிலும் உள்ளே வந்து சபையில் அமர்ந்தான்.

நண்பர்கள் அனைவரும் பரீட்சை முடிந்தவுடன் என்ன செய்யப் போகிறோம்? எங்கே செல்ல போகிறோம்? என்ற விடயத்தை மிகவும் ஆரவாரமாக பேசிக் கொண்டிருக்கையில் காமில் மாத்திரம் மௌனமாக இருந்தான். அதனை அவதானித்த பாரிஸ் காமிலை தனியாக அழைத்துச் சென்று அன்பாக அரவணைத்து,

''காமில் என்ன சோதின முடிஞ்ச பொறகு எங்கையும் போர ஐடியா இல்லயா?''

''எங்க பாரிஸ் என்ட வீட்டு நிலைமை உனக்கு நல்ல தெரியும். எங்கட உம்மாவும் எத்தன நாளைக்கித்தான் நெருப்புல வேகுறது. அவங்களும் பாவம்தானே அதனால...''



என்று காமில் வார்த்தையை இழுக்க பாரிஸ் ''அதனால் என்ன?''

''இல்ல எக்சேம் முடிஞ்ச பிறகு படிக்கிற யோசன இல்ல. அப்படி படிக்கிறன்டா மிச்சம் காசு வேனும்.'' காமில் கூறியதை கேட்ட பாரிஸ் சற்று அதிர்ந்து போனான்.

''காமில் நீ படிக்கனும்டா. நா ஒனக்கு வேண்டிய ஹெல்ப பண்ணுறேன்'' என்று பாரிஸ் கூறினான்.

''வேணாம் பாரிஸ்... என்னால உனக்கு ஏன் வீண் கஷ்டம்? நீ அப்படி சொன்னதே பெருசு''

என்று கூறி கண்களை துடைத்தவனாக அவ்விடத்தில் இருந்து நகர்ந்தான். காமில் கூறிய அந்த வார்த்தைகள் பாரிஸுக்கு இன்னும் அவன் மீது பாசத்தை கூட்டியது. அன்றைய நாள் முழுவதும் காமிலுக்கு எவ்வாறு உதவுவது என்றே சிந்தித்தான். அவனது யோசனையின் முடிவாக தனது தந்தையை நாடிச் சென்றான் பாரிஸ்.

தனது தந்தையிடம் சென்ற பாரிஸுக்கு எவ்வாறு பேச்சை ஆரம்பிப்பது என்று அறியாதவனாக,

''வாப்பா மத்தவங்களுக்கு ஹெல்ப் பண்ணுரத பத்தி என்ன நினைக்கிறீங்க?''

''ஏன் மகன் அது நல்ல விசயம்தானே! எங்களுக்கு அல்லாஹ் சொத்து சொகத்த தந்திருக்கான். அதனால நாங்க மத்தவங்களுக்கு ஹெல்ப் பண்ணித்தானே ஆகணும். இதுல என்ன இருக்கு''

''சரி வாப்பா நானும் ஒருத்தருக்கு உதவணும்டு ஆசப்படுறன். அதனால எனக்கு உம்ராக்காக செலவாகுற சல்லி எல்லாம் தாங்களேன்''

''அப்படி யாருக்கு ஹெல்ப் பண்ண போறிங்க மகன்?''

''வாப்பா என்ட பிரன்ட் காமிலுக்கு'' என்று காமிலின் குடும்ப நிலைமையை தந்தையிடம் கூறினான்.

இதனை கேட்ட முகம்மத் ஹாஜியார்,

''சரி மகன் நீங்க சொன்னதுபோல சல்லி எல்லாம் சேர்த்து காமில்ட படிப்பு விஷயத்துக்கு நாங்க குடுப்போம்'' என்று கூறிய மறுகணம் நல்ல நண்பன் பாரிஸின் விழிகள் கண்ணீரால் பதில் சொன்னது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வாழ்வில் மறுமையை நம்புதல் எப்போதும் உள்ளத்தில் ஆழமாக பதிந்திருக்க வேண்டும். அப்போதுதான் எமக்கு வருகின்ற சோதனைகள், நோய்கள், இழப்புக்களை நாம் பொருந்திக் கொள்ள முடியும்.

# "சாதிப்பதற்கு உடலின் பலயீனங்கள் தடையல்ல"

## இர்பான் ஹாபிஸ்

**நேர்காணல்: அப்பாஸ் (இர்பானி)**

அகரம் சஞ்சிகை தன்னுடைய சாதனையாளர் பக்கத்தில் இம்முறை மாற்றுத் திறனாளி ஒருவரை சந்தித்தது. இழப்பு, நோய், உடல் குறைபாடுகள் என்பன சாதனைக்கு ஒரு தடையல்ல என்பதை தன்னுடைய நடைமுறை வாழ்வின் மூலம் நிரூபித்த ஓர் உருக்கமான உறவை அகரம் சந்தித்தது. அவர்தான் தர்கா நகரைச் சேர்ந்த 34 வயதான இர்பான் ஹாபிஸ். இவர் கடந்த 27 வருடங்களாக தசை நார் தேய்வு (Duchenne Muscular Dystrophy) என்ற நோயினால் பீடிக்கப்பட்டு கட்டிலிலே அசைவின்றி கிடக்கிறார். மருத்துவ உலகில் 'அநாதை நோய்கள்' என வர்ணிக்கப்படும் மருத்துவ ஏற்பாடுகள் குறைவாக காணப்படக் கூடிய ஒரு நோயாகவே இது கருதப்படுகின்றது. இவ்வாறான சோதனைகளுக்கு மத்தியில் பல அடைவுகளைக் கண்டு குடும்பத்தின் ஓர் உயிர்ப்பான உறவாக எல்லோரிடமும் அன்பாய் இருப்பது ஆச்சரியமான விடயம்தான். இர்பான் ஹாபிஸ் நாடறிந்த எழுத்தாளரும் சிந்தனையாளருமான ஹாபிஸ் இஸ்ஸதீன் அவர்களின் புதல்வராவார். அகரம் சஞ்சிகை இர்பான் ஹாபிஸ் அவர்களோடு மேற்கொண்ட உரையாடலை உங்களோடு பகிர்ந்து கொள்கின்றது.

**அகரம்:** வாழ்க்கையைப் பற்றி உங்களது பதிவு என்ன?

**இர்பான் ஹாபிஸ்:** அல்லாஹுத்தஆலா இவ்வுலகில் மனிதனுக்கு பெரும் அருள்களைக் கொடுத்திருக்கின்றான். எனவே, அவ்வருள்களைப் பெற்ற மனிதன் எப்போதும் அல்லாஹ்வுக்காகவே தன்னுடைய வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும். இவ்வுலகிலுள்ள அனைவரோடும் மனிதத் தன்மைகளோடு நடந்து கொள்வதுடன், பிறருக்கு உதவி செய்து வாழும் நிலையையும் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். தன்னுடைய

**அகரம்:** இவ்வாறான நோய்க்கு மத்தியிலும் நீங்கள் சாதித்திருக்கிறீர்கள். இதைப் பற்றிச் சொல்லுங்கள்.

**இர்பான் ஹாபிஸ்:** உண்மையில், ஒரு மனிதனின் உடலின் பலத்தை தீர்மானிப்பது அவனது உள்ளமாகும். உடலின் அங்கங்கள் அசைவுகள் இல்லாவிட்டாலும் உலகையே எம்மால் அசைக்க முடியும் என்பது என்னுடைய நம்பிக்கை. அல்லாஹ் மீது நம்பிக்கை வைத்து நாம் வாழ்கின்றபோது இவற்றை எம்மால் சாதித்துக்



கொள்ள முடியும். நான் ஆரம்பக் கல்வியை தமிழ் மொழியில் பெற்று இடையில் பாடசாலைக் கல்வியை இழந்தாலும் கூட ஆங்கில மொழியை சரளமாக கற்றுக் கொண்டேன். அவ்வாறே, நவீன தொடர்பு சாதனங்களையும் இயக்கக் கூடிய ஆற்றல்களையும் பெற்றுக் கொண்டேன். இதன் மூலம்தான் என்னால் ஆங்கில மொழியில் நூல்களை வெளியிட முடிந்தது.

**அகரம்:** எமது இளைஞர்களுக்கு நீங்கள் குறிப்பிடும் அறிவுரைகள் என்ன?

**இர்பான் ஹாபிஸ்:** இளைஞர் பருவமென்பது அல்லாஹ்வால் அருளப்பட்ட ஒரு முக்கியமான காலகட்டமாகும். இக்காலத்தை நாம் அல்லாஹ்வுக்கு ஏற்ற விதத்தில் அமைத்துக் கொள்ள வேண்டும். குறிப்பாக, இது சாதிக்கும் பருவம். நிறைய வெற்றிகளை காணக் கூடிய




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பருவம். இதனை உணர்ந்து வழிகாட்டல்களுடன் தமது இளைஞர் பருவத்தை அமைத்துக் கொள்வது கட்டாயமானதாகும். சோதனைகள், கஷ்டங்கள், நோய்கள், இழப்புக்கள் எவ்வாறான தடைகள் வந்தபோதும் நாம் அவற்றை பெரிதாக எடுத்துக் கொள்ளாமல் அல்லாஹ்வை நம்பி எமது பயணத்தை தொடர வோண்டும். இன்று நவீன தொடர்பு சாதனங்களின் மூலமாக எமது இளைஞர்களின் முக்கியமான இக்காலகட்டம் வழி பிறழ்ந்து செல்கிறது. எனவே, இவை நெறிப்படுத்தப்பட்டு எமது இளைஞர்கள் சீராக தமது வாழ்வை அமைத்துக் கொள்ள வேண்டும்.

**அகரம்:** உங்களுடைய வெளியீடுகள் பற்றிக் கூறுங்கள்...




**இர்பான் ஹாபிஸ்:** 'moments of merriment' என்ற என்னுடைய புத்தகம் ஆங்கில மொழியில் கவிதைகளை உள்ளடக்கியதாக காணப்படுகிறது. சுமார் ஆயிரம் பிரதிகள் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டது. அதில் இன்னொரு விசேட அம்சம் என்னவென்றால் இப்புத்தகம் தமில் மொழியிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. என்னுடைய இரண்டாவது வெளியீடாக 'silent thoughts' என்ற நூல் அமைகிறது. இந்நூல் என்னுடைய வாழ்வில் இடம்பெற்ற முக்கிய சம்வங்கள், என்னுடைய சகோதர சகோதரிகளின் அரவணைப்பு, சக நண்பர்களையும் படம்பிடித்துக் காட்டும் சிறுகதை தொகுப்பாக அமைகின்றது. 'silent struggle' என்பது என்னுடைய அடுத்த வெளியீடாகும்.




**அகரம்:** உங்களுடைய ஆற்றல்கள், ஆளுமை பண்புகள் தொடர்பாக இன்னும் பல வெளியீடுகளிலும் வந்துள்ளதாக நாம் அறிகிறோம். இது பற்றி...

**ஒரு மனிதனின் உடலின் பலத்தை தீர்மானிப்பது அவனது உள்ளமாகும். உடலின் அங்கங்கள் அசைவுகள் இல்லாவிட்டாலும் உலகையே எம்மால் அசைக்க முடியும் என்பது என்னுடைய நம்பிக்கை**

**இர்பான் ஹாபிஸ்:** அல்ஹம்துலில்லாஹ்! என்னைப் பற்றிய அறிமுகங்கள் சில ஊடகங்களில் வெளியாகி இருக்கின்றன. அண்மையில் வெளியான ஒரு சிங்கள புத்தகத்தில் என்னைப் பற்றி ஒன்பது பக்கங்கள் எழுதப்பட்டிருந்தன. அவ்வாறே, Knowledge Box ஊடக நிறுவனம் நடத்திய 'இவர்கள்' என்ற நிகழ்ச்சியில் ஜாமிய்யா நளீமிய்யா கலாபீடத்தின் பிரதிப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் ஏ.சீ. அகார் முஹம்மத் அவர்களுடனான கலந்துரையாடலை என்னுடைய வாழ்வில் ஒரு முக்கியமான நிகழ்வாக கருதுகின்றேன்.

**அகரம்:** உங்களது பெற்றோருடனா உறவு பற்றிக் குறிப்பிடுங்கள்.

**இர்பான் ஹாபிஸ்:** உண்மையில், எனக்கு கிடைத்திருக்கும் பெற்றோர் நிறைய சோதனைகளை சந்தித்தவர்கள். எப்போதும் அச்சோதனையிலிருந்து விலகியவர்கள் அல்ல. மாறாக, சோதனைகள் அல்லாஹ்வின் அருள் என்ற நோக்கிலேயே அவர்கள் இதுவரைக்கும் என்னோடு வாழ்ந்து வருகிறார்கள்.

**அகரம்:** இறுதியாக ஏதாவது குறிப்பிட விரும்பின்...

**இர்பான் ஹாபிஸ்:** இன்று எமது மாணவர்களில் அநேகமானவர்கள் பாடசாலை செல்கிறார்கள். இருந்தபோதும் தங்களுடைய ஆற்றல்களை அறியாது வருடங்களை கழிக்கின்றனர். ஒரு வகுப்பறையை எடுத்துக் கொண்டால் வழமையாக ஒருவரே முதலாமவராக வருவார். அவருடன் போட்டியிட எவரும் முன்வருவதில்லை. காரணம் தன்னால் முடியும் என்ற நம்பிக்கையின்மையே. எனவே, நாம் எமது வாழ்வில் தன்னம்பிக்கையுடன் வாழும்போது வெற்றியடையலாம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குண்டுத் தாக்குதல்கள்




- 2016 மார்ச்சில் பாகிஸ்தான் லாகூர் நகரில் உள்ள பூங்கா ஒன்றில் குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்றதன் காரணமாக 72 பேர் வரை பலியாகியுள்ளனர்.
- இத்தாக்குதலுக்கு பாகிஸ்தானின் தலிபானின் ஜமாத் உல் அஹ்ரார் உரிமை கோரியுள்ளது.
- 2016 மார்ச்சில் பெல்ஜியத் தலைநகர் பிரசல்ஸில் விமான நிலையத்திலும் புகையிரத நிலையத்திலும் குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்றதன் காரணமாக 26 பேர் வரை பலியாகினர்.
- இத்தாக்குதலுக்கு ஐ.எஸ். அமைப்பு பொறுப்பேற்றுள்ளது.
- 2016 மார்ச்சில் துருக்கிய தலைநகர் அங்காராவில் உள்ள சனசந்தடி மிக்க சதுக்கத்திற்கு அண்மையில் உள்ள பேருந்து நிலையத்தில் இடம்பெற்ற கார் குண்டு தாக்குதலில் 37 பேர் பலியானதுடன் இதற்கு குர்திஷ் தொழிலாளர் கட்சி இயக்கத்தின் ஒரு பிரிவு உரிமை கோரியுள்ளது.

## தேசிய பல்கலைக்கழக அனுமதி

- பல்கலைக்கழக அனுமதி பெறும் மாணவர் தொகையை 25,000 இருந்து 37500 ஆக அதிகரிப்பதற்கான வேலைத் திட்டங்கள் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்பட உள்ளன.
- தற்போது 150000 மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு தகுதி பெற்ற போதும் 17 வீதமான 25000 பேரே பல்கலைக்கழக அனுமதியை பெற முடிவதுடன், இதனை 25 வீதமாக அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.
- இலங்கையைப் பொறுத்தவரையில் 100 சதவீதத்திற்கும் 50 இற்கும் மேற்பட்ட பல்கலைக்கழக மாணவர்கள் கலைப் பட்டதாரிகளாக வெளியேறுவது சவாலாகும். இதன் காரணமாகவே தொழில் வழங்கும் நிறுவனங்கள் தொழில் வழங்க தயாராக உள்ளபோதும், தமக்குத் தேவையான தகைமை உள்ள பட்டதாரிகள் இல்லை என்ற குற்றச்சாட்டுக்களும் முன்வைக்கப்படுகின்றன.





திரு. பீ. உமா சங்கர்,
B.Com (Jaf), M.Com (Kelaniya) (PDE) Spl.Trd.com, NDBF, Sri Lanka Technical College - Colombo

## மியன்மாரின் புதிய அரசாங்கம்



- மியன்மார் தேர்தலில் வெற்றி பெற்றுள்ள தேசிய ஜனநாயக லீக் கட்சியின் தலைவி ஆங் சான் சூகி அந்நாட்டு புதிய சிவிலிய அரசாங்கத்தின் வெளிநாட்டு அமைச்சராக 2016 மார்ச்சில் பதவி ஏற்றுள்ளார்.
- தேசிய ஜனநாயக லீக் கட்சியை சேர்ந்த ஹதின் யாவ் 2016 மார்ச்சில் கடந்த ஐம்பது வருடங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதியில் தெரிவு செய்யப்பட்ட முதலாவது சிவிலிய தலைவராவார்.
- தேசிய ஜனநாயக லீக் கட்சியின் தலைவர் ஆங் சாங் சூகி ஜனாதிபதியாக பதவி வகிப்பதற்கு அரசியலமைப்பு ரீதியில் தடையை எதிர்கொண்டுள்ள நிலையில் தனக்கு பதிலீடாக பதவியை ஏற்றுக் கொண்டுள்ளவர் மூலம் ஆட்சி செய்ய முடிவு எடுத்துள்ளார்.
- 1962 ஆம் ஆண்டு இராணுவப் புரட்சி மூலம் ஆட்சி கைமாறியதை தொடர்ந்து இராணுவத் தொடர்புகளற்ற ஒருவர் ஜனாதிபதியாக பதவியேற்றிருப்பது அந்நாட்டின் ஜனநாயக வரலாற்றில் முக்கியமானதாக கருதப்படுகின்றது.
- தெரிவு செய்யப்பட்ட இரு துணை ஜனாதிபதிகளுள் ஒருவர் சிவிலியனாக காணப்படும் அதே வேளை மற்றையவர் பாராளுமன்றத்தில் 25% ஆசனங்களை இராணுவத்தினர் வைத்திருப்பதன் காரணமாக இராணுவத்தை சேர்ந்த ஒருவரே அடுத்த துணை ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த (சா/த) பரீட்சை 2015




- 2016 மார்ச்சில் வெளியான க.பொ.த. (சா/த) பரீட்சை 2015 இன் பிரகாரம் பின்வருமாறு சித்தி மற்றும் சித்தியின்மைகள் வெளியிடப்பட்டன.
- 6012 மாணவர்கள் ஒன்பது பாடங்களிலும் ஏ தர சித்தி
- பரீட்சைக்கு தோற்றிய 274324 பாடசாலை பரீட்சார்த்திகளுள் 189428 பரீட்சார்த்திகள் உயர்தரம் கற்க தகுதி பெற்றுள்ளனர்.
- பரீட்சைக்கு தோற்றிய 69.33 வீதமான பரீட்சார்த்திகள் பரீட்சையில் சித்தி அடைந்துள்ளதுடன், 83,796 பரீட்சார்த்திகள் பரீட்சையில் சித்தி அடையவில்லை.

# இலங்கையின் முதலாவது திறந்த வெளி விலங்கியல் பூங்கா





- இலங்கையின் முதலாவது சபாரி விலங்கியல் பூங்கா அம்பாந்தோட்டை ரிதியகமவில் 2016 பெப்ரவரியில் திறந்து வைக்கப்பட்டது.
- 2008 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் அடிக்கல் நாட்டப்பட்ட இப்பூங்கா 500 ஏக்கர் நிலப்பரப்பில் 2600 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு, இலங்கையின் முதலாவது சபாரி விலங்கியல் பூங்காவாக மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது.
- இவ்விலங்கியல் பூங்காவில் விலங்குகளை சுதந்திரமாக கண்டு களிப்பதற்கான வசதிகள் பொது மக்களுக்கு செய்யப்பட்டுள்ளதோடு, சிங்க வலயம், பெரிய மிருக வலயம், ஆசிய யானைகள் வலயம் என மூன்று வலயங்களாக பிரிக்கப்பட்டுள்ளதுடன் மிருக வைத்தியசாலை, சேவைப் பிரதேசம் என்பனவும் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

# பெரும் புயல்

- 2016 மார்ச்சில் பிரித்தானியாவை மணிக்கு 105 மைல் வேகத்தில் 'கெற்றி' பெரும் புயல் தாக்கி உள்ளது. இதன் காரணமாக இங்கிலாந்து மற்றும் வேல்ஸுக்கான விமான சேவைகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

# உலக சிறுநீரக தினம்

World Kidney Day™

- உலக சிறுநீரக தினம் வருடாந்தம் மார்ச் 10 இல் அனுஷ்டிக்கப்படுகிறது.
- 2016 ஆம் ஆண்டிற்கான உலக சிறுநீரக தின தொனிப் பொருள் 'சிறுநீரக நோய்களும் சிறார்களும்' என்பதாகும்.
- இலங்கையில் நாட்பட்ட சிறுநீரக நோயானது 1990 களில் நாட்டின் ரஜரட்ட பகுதியில் இனங்காணப்பட்ட பின்னர் நாட்டின் பல்வேறுபட்ட பகுதிகளுக்கும் குறிப்பாக நாட்டின் மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்கள் தவிர்ந்த 7 மாகாணங்களிலும் 11 மாவட்டங்களிலும் பரவியுள்ளதுடன், அநுராதபுர மாவட்டத்தில் மட்டும் 22,000 பேர் நாட்பட்ட சிறுநீரக நோயினால் இறந்துள்ளனர்.
- இதற்கென நாட்பட்ட சிறுநீரக நோய்த் தடுப்புக்கான ஜனாதிபதி செயலணி உருவாக்கப்பட்டுள்ளதுடன் இதன் இலக்கு, நாட்பட்ட சிறுநீரக நோய் மேலும் பரவாமல் தடுப்பதோடு பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான நலன்புரி நடவடிக்கைகளில் ஈடுபடுதல் ஆகும்.
- சிறுநீரக நோய்த் தடுப்பு நடவடிக்கைகளுக்கு தேவையான நிதியினை திரட்டும் முகமாக சிறுநீரக நோய்த் தடுப்புக்கான ஜனாதிபதி நிதியம் நிறுவப்பட்டுள்ளது.
- எல்சல்படோர், லாவோஸ், வியட்னாம், பங்களாதேஷ், இந்தியாவின் ஆந்திர பிரதேசம் மற்றும் மத்திய கிழக்கு போன்ற நாடுகளில் நாட்பட்ட சிறுநீரக நோயானது பாரதூரமான சுகாதார பிரச்சினையாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அஸ்கிரிய மகாநாயக்கர்



❖ கண்டி அஸ்கிரிய பௌத்த பீடத்தின் மகாநாயக்க தேரரான கலகம ஸ்ரீ அத்தஸ்ஸி தேரர் 2016 மார்ச்சில் காலமானார்.

❖ 2015 மே 08ஆம் திகதி 21 ஆவது மகாநாயக்க தேரராக பதவி ஏற்றுக் கொண்டார்.

❖ 1922.01.11 இல் பிறந்த இவர், 1936 ஆம் ஆண்டு துறவறம் பூண்டு, 1941 ஆம் ஆண்டு உபகம்பத நிலையை அடைந்ததுடன், 1947 இல் ராஜகீதய பண்டித்த பட்டத்தை பெற்றுள்ளார்.




## பெர்முடா முக்கோண பிராந்திய அனர்த்தம்

❍ அத்திலாந்திக் சமுத்திரத்தில் பெர்முடா முக்கோணம் (சாத்தானின் முக்கோணம்) என அழைக்கப்படும் பிராந்தியத்தில் பயணிக்கும் கப்பல்களும் அதற்கு மேலாக பறக்கும் விமானங்களும் மர்மமான முறையில் காணாமல் போவது நீண்ட காலமாகவே அறியாத புதிராக இருந்தது.

❍ இயற்கை எரிவாயு வளம் மிக்க நோர்வேயின் கடற்கரைக்கு அப்பால் சமுத்திரத்தில் அரை மைல் அகலமும் 150 அடி ஆழமும் கொண்ட மெதேன் வாயுவால் நிரம்பிய பாரிய எரிமலை வாய்கள் காரணமாக அவற்றிலிருந்து அளவுக்கதிகமான மெதேன் வாயு வெளியிடப்படுவதால் அந்தப் பிராந்தியத்தின் சமுத்திர மேற்பரப்பு சூடாகி அந்த மேற்பரப்பிலும் அதற்கு மேலும் பயணிக்கும் பொருட்கள் சமுத்திர அடித்தளத்தை நோக்கி உள்வாங்கப்படுவதாக 2016 மார்ச்சில் நோர்வேயின் ஆர்டிக் பல்கலைக்கழகத்தை சேர்ந்த விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

❍ பெர்முடா முக்கோண பிராந்தியம், வட அத்திலாந்திக் சமுத்திரத்தில் பிரித்தானியாவின் கடலுக்கு அப்பாலான பிராந்தியங்களில் இருந்து அமெரிக்க புளோரிடா கடற்கரை மற்றும் புயர்ரோ றிக்கோ வரையான பிரதேசத்தை உள்ளடக்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

## அல்லி மலர்



✎ இலங்கையின் தேசிய மலராக இதுவரை காலமும் இருந்த நீலோற்பலம் மலருக்கு பதிலாக அல்லி மலரின் பெயர் 2016 மார்ச்சில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

✎ தற்போதைய நீலோற்பலம் மலரானது வெளிநாடொன்றுக்கு சொந்தமான மலர் எனவும், வெள்ளை ஒளிர் நீல நிற இதழ்களை கொண்ட அல்லி மலர் இலங்கைக்கே உரித்தான மலராக காணப்படுவதாகவும், இவை உலர் வலய நீர்நிலைகளில் பரந்துபட்டு வளர்வதாகவும் உயிர் பல்வகைமைத்துவ செயலக பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளார்.

## சர்வதேச மகளிர் தினம்

❍ சர்வதேச மகளிர் தினம் வருடாந்தம் மார்ச் 8 இல் கொண்டாடப்படுகின்றது.

❍ 2016 ஆம் ஆண்டிற்கான சர்வதேச மகளிர் தின தொனிப்பொருள் 'திடமான மகளிரும் ஒளிமயமான எதிர்காலமும்' என்பதாகும்.

**இலங்கையில் மகளிருக்காக முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டங்கள்**

❖ அரசியல் மற்றும் தீர்மானம் எடுக்கும் மட்டங்களில் 25% பெண்களின் பங்களிப்பு

❖ கிராமிய முதலீடுகளில் 25% பிரதிலாபத்தை பெண்களுக்கு பெற்று கொடுத்தல்.

❖ 1938 பெண்கள், 1929 இலங்கை குழந்தைகள் உபகார தொலைபேசி இலக்க கோவை

❍ இலங்கையில் பெண்களின் சனத்தொகை 52.8% ஆகவும், 2015 இல் பெண் ஊழியர் படை பங்கு பற்றல் வீதம் 35-40% ஆகவும், 2015 இல் இலங்கைப் பாராளுமன்றத்தில் தேசியப் பட்டியல் உட்பட 13 நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.

**பெண்கள் தின வரலாறு**

❖ அமெரிக்க சோஷலிச கட்சியின் பிரகடனத்தை அடுத்து முதலாவது சர்வதேச பெண்கள் தினம் 1909.02.28 இல் கொண்டாடப்பட்டது.

❖ முதலாவது சர்வேதச பெண்கள் மாநாடு கோபனாவனில் 1910 இல் நடைபெற்றது.

❖ முதலாவது சர்வதேச பெண்கள் தினம் 1911 இல் கினாரா செட்இன் என்பவரால் மார்ச் 19 இல் தொடக்கப்பட்டது.

❖ சர்வதேச பெண்கள் தினம் 1913 இல் மார்ச் 08 ஆக மாற்றப்பட்டது.

❖ 1975 இல் சர்வதேச மகளிர் தினத்துக்கு இலங்கையினால் கருப்பொருள் ஒன்று கொடுக்கப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

AHARAM அகரம்

சஞ்சிகையின்

# மாபெரும் குர்ஆனிய வினா- விடைப் போட்டி

**ஜூன் மாத அகரம் இதழ் ரமழான் விசேட இதழாக வெளிவரவுள்ளது, இன்ஷா அல்லாஹ்.**

**ரமழான் மாதத்தில் மாணவர்களின் அல்குர்ஆனுடனான உறவை வலுப்படுத்தும் நோக்கில் இஸ்லாமிக் புக் ஹவுஸ் நிறுவனத்தின் அனுசரணையுடன் மாபெரும் குர்ஆனிய வினா- விடைப் போட்டியொன்றை அகரம் நடத்த இருக்கிறது என்பதை வாசகர்களுக்கு மகிழ்வுடன் அறியத் தருகிறோம்.**

***ஜூன் மாத அகரம் சஞ்சிகையில் இணைக்கப்பட்டுள்ள 100 வினாக்களுக்கான விடைகளை எழுதி அனுப்பி பரிசில்களை வெல்லுங்கள்***

## பரிசுத் தொகை

- முதல் பரிசு : 5000 ரூபா பெறுமதியான புத்தக வவுச்சர்
- இரண்டாம் பரிசு : 3500 ரூபா பெறுமதியான புத்தக வவுச்சர்
- மூன்றாம் பரிசு : 1500 ரூபா பெறுமதியான புத்தக வவுச்சர்

- 75 இற்கு அதிகமான புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளும் அனைத்து மாணவர்களுக்கும் சான்றிதழ்கள்
- போட்டியில் அதிகமான மாணவர்களை பங்கேற்கச் செய்யும் முதல் மூன்று பாடசாலைகளின் நூலகத்திற்கு பெறுமதிவாய்ந்த நூல்கள் வழங்கப்படும்

அனுசரணை

## இஸ்லாமிக் புக் ஹவுஸ்

**77, தெமடகொட வீதி, கொழும்பு - 09**

**தொலைபேசி: 0115925935**

## எண்ணங்களின் வண்ணங்கள் - 10

- உங்களது சித்திரம் A4 தாள் அளவில் அமைதல் வேண்டும்.
- சித்திரங்களுக்கு பயன்படுத்தும் வர்ணம் 'சோக் கலர்' ஆக இருத்தல் வேண்டும்.
- சிறந்த மூன்று படைப்புகளுக்கு இறுவட்டுக்கள் (DVD) வழங்கப்படுவதுடன் பாராட்டைப் பெறும் சித்திரங்களும் அகரத்தில் பிரசுரிக்கப்படும்.

**தலைப்பு : யானைக் கூட்டம்**

**அனுப்ப வேண்டிய இறுதித் திகதி: 2016 மே 20**

அனுப்ப வேண்டிய முகவரி:
அகரம் சஞ்சிகை, 77, தெமடகொட வீதி,
கொழும்பு 09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






## தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்

எம்.எப்.எம். பாஹிம் B.A, PGDE (Merit),RICTP,MEd
(ஆசிரிய ஆலோசகர்)
வளவாளர், தேசிய கல்வி நிறுவகம்
கணினி யுகம் சஞ்சிகையின் ஆசிரியர்

# கணினி சுட்டிகள் (*Mouse*)


## பாடம் 03

சுட்டி என்பது கணினிக்குத் தகவல்களை உள்ளீடு செய்வதற்குப் பயன்படுத்தப்படும் ஒரு சாதனமாகும். இது தகவல்களை உள்ளீடு செய்வதற்குப் பயன்படுத்தப் படுகின்றமையால் உள்ளீட்டுச் சாதனமாக அடையாளப் படுத்தப்படுகின்றது.

வரைவியற் பயனர் இடைமுகம் (GUI) கணினிகளில் பயன்பாட்டிற்கு வந்ததன் பின்னர் கணினியில் சுட்டியின் தேவை ஏற்பட்டது. கணினிகளின் சுட்டியானது விசைப் பலகைக்குப் (Keyboard) பதிலாக மிக முக்கிய பணிகளை நிறைவேற்றுகின்றது. இச்சுட்டியை தட்டையான ஒரு பரப்பில் வைத்து நகர்த்துவதன் மூலம் கணினித் திரையில் காணப்படும் Icon களை தேர்ந்தெடுக்க, நகர்த்த, இயக்கச் செய்ய முடியும்.

### சுட்டி தோன்றிய வரலாறு

உலகின் முதல் கணினிச் சுட்டி Douglas Engelbart என்பவரால் 1964 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இது ஒரு மரக் கட்டையை மூலமாக வைத்தே உருவாக்



கப்பட்டது. அதற்கு இரண்டு உலோக சக்கரங்களும் பொருத்தப்பட்டிருந்தன. பின்பு 1968 ஆம் ஆண்டு Fall Join computer conference இல் நிரூபிக்கப்பட்டு நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. 1972 இல் Ball mouse உம் 1980 களில் Optical Mouse உம் பயன்பாட்டிற்கு வந்தன.

சாதாரண கணினிச் சுட்டியானது இரண்டு பட்டன்களை தன்னகத்தே கொண்டுள்ளது. இவ்விரு பட்டன்களும் பல்வேறுபட்ட நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன. இவ்விரண்டு பட்டன்களுக்கு இடையே அமைந்திருக்கும் ஒரு வட்ட வடிவமான சில்லானது திரையை மேல் நோக்கியும் கீழ் நோக்கியும் நகர்த்துவதற்குப் பயன்படுத்தப்படுகின்றது.

### சுட்டியை கையாளும் முறை

பொதுவாக, கணினிச் சுட்டிகளானது வலது கைப் பாவனையாளர்களையே மையப்படுத்தி உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. எனினும், இடது கைப் பாவனையாளர்கள் அதனை Setting இல் சில மாற்றங்களைச் செய்து பயன்படுத்த முடியும்.

- உங்கள் ஆட்காட்டி விரல் இடது பக்க பட்டனில் இருக்க அடுத்த விரல்கள் இலேசாக சுட்டியை பிடித்தவண்ணம் இருத்தல் வேண்டும்.
- உங்களது நடு விரலை சுட்டியில் காணப்படும் Wheel ஐ நகரத்துவதற்கும் மோதிர விரலை வலது பக்க பட்டனை பயன்படுத்தவும் உபயோகிக்க முடியும்.
- உங்களது உள்ளங்கையை (Arm) மேசையின் மேல் வைத்திருத்தல் வேண்டும்.
- பொருத்தமில்லாமல் உங்களது கைகளையும் விரல்களையும் பயன்படுத்துவது உள்ளங்கை சார் பிரச்சினைகள் தோன்ற வாய்ப்பை ஏற்படுத்தும்.

### சுட்டியின் வகைகள்

சுட்டியை பல்வேறு முறைகளல் வகைப்படுத்தி நோக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாவது வகை

1. Inbuilt Mouse உள்ளே பொருத்தப்பட்ட சுட்டிகள்

மடிக் கணினிகளில் சுட்டியானது அதனுள்ளேயே பொருத்தப்பட்டிருக்கும். அவை இவ்வகையில் அடங்கும். இதற்கு Touch pad என்றும் அழைப்பர்.

2. Outside Mouse வெளியிலிருந்து பயன்படுத்தப்படும் சுட்டிகள்

சாதாரணமாகப் பயன்படுத்தும் சுட்டிகள்.


இரண்டாவது வகை

1. Cable மூலம் தொழிற்படுபவை

USB அல்லது PS2 குதைகளைக் கொண்டு காணப்படும் இச்சுட்டிகளை கணினியுடன் தொடுக்கும்போது தொழிற்படுத்த முடியும்.



2. Cable இன்றி தொழிற்படுபவை (Wireless)



வயர் இன்றி Bluetooth மூலம் பயன்படுத்தப்படுபவற்றை இவற்றில் உள்ளடக்க முடியும்.



## சுட்டியைப் பரிச்சயப்படுத்திக் கொள்ள...

கணினியை முதன் முறையாகப் பயன்படுத்துபவர்கள் சுட்டியைப் பயன்படுத்துவதில் சிரமப்படுவதுண்டு. அச்சிரமத்தைப் போக்கி அவர்கள் சுட்டியில் பரிச்சயம் பெறுவதற்காக சில வழிமுறைகளை நாம் தேடிக் கொள்வதுமுண்டு.

1. Pain எனும் மென்பொருளைப் பயன்படுத்தி படங்களை வரைந்து சுட்டியுடனான பரிச்சயத்தை ஏற்படுத்திக் கொள்ள முடியும்.
2. Solitaire போன்ற கணினியில் பொருத்தப்பட்டிருக்கும் விளையாட்டுக்களை விளையாடுவதன் மூலமும் சுட்டியுடனான பரிச்சயத்தை ஏற்படுத்திக் கொள்ளலாம்.
3. அதேவேளை, இணையத்தில் காணப்படும் சில பக்கங்கள் சுட்டியுடனான பரிச்சயத்திற்கு அதிகம் பயன்படுகின்றன.

உ+ம் :

1. http://www.skyways.org/central/mouse/page1.html
2. http://pbclibrary.org/mousing/mousercise.html

### சுட்டியில் காணப்படும் *Click* கள்

1. Single Click *(ஒரு தடவை Click செய்தல்)*
   Icon களை தேர்ந்தெடுக்க, நகர்த்துவதற்கு ஒரு தடவையே சுட்ட வேண்டும்.
2. Double Click *(இரண்டு தடவை Click செய்தல்)*
   Icon களை இயக்கச் செய்ய இரண்டு முறை சுட்ட வேண்டும்.
3. Triple Click *(மூன்று தடவை Click செய்தல்)*
   ஒரு பந்தியை முழுமையாக தெரிவு செய்வதற்கு மூன்று முறை சுட்ட வேண்டும்.
4. Right Click *(வலது பக்கம் Click செய்தல்)*
   Icon களோடு தொடர்புபட்ட Setting செய்வதற்கு வலது பக்கத்தை சுட்ட வேண்டும்.

## சுட்டியைப் பயன்படுத்துவனால் ஏற்படும் நன்மைகளும் தீமைகளும்

**நன்மை**

- ❒ பணிகளை நிறைவேற்றுவதற்கு இலகுவானது.
- ❒ Bluetooth ஐப் பயன்படுத்தி தூரத்திலிருந்தும் சுட்டியைப் பயன்படுத்த முடியும்.
- ❒ கேபிள்கள் உள்ள சுட்டிகளை அதிக காலம் பயன்படுத்த முடியும்.
- ❒ குறைந்த விலையில் சுட்டிகளை சந்தையில் பெற்றுக் கொள்ள முடியும்.

**தீமை**

- ❒ தொடர்ந்து சுட்டியைப் பயன்படுத்துவதனால் உள்ளங்கை சார் சுகாதாரப் பிரச்சினைகள் தோற்றம் பெறும்.
- ❒ கேபிள்கள் உள்ள சுட்டிகளை கணினிக்கு அருகாமையில் வைத்தே பயன்படுத்த வேண்டும்.
- ❒ Wireless சுட்டிகளில் Battery கள் பழுதடைவதால் அதிக காலம் பயன்படுத்துவது சிரமம்.
- ❒ குறைந்த விலையில் கிடைக்கும் சுட்டிகளின் தரம் குறைவானதாகையால் அதன் ஆயுட்காலம் குறைவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மனிதன் தான் நினைப்பது போலவே ஆகின்றான். நீங்கள் நினைப்பது போலவே நீங்கள் ஆகுவீர்கள். ''என்ன, நான் நினைப்பது போலவே என்னால் ஆக முடியுமா என்று நீங்கள் ஆச்சரியத்தோடு வினவுவது புரிகிறது. நிச்சயமாக முடியும். ஒரு மனிதன் தான் நினைப்பது போலவே வாழ்வில் உயர்வடைய முடியும் என்ற உண்மை இன்று நேற்றல்ல, காலம் காலமாக உண்மைப்படுத்தப்பட்டுக் கொண்டுதான் இருக்கிறது.

ஏன், நீங்கள் கூட நினைத்தது போலவே இலட்சியம் ஈடேறிய மனிதர்களைக் கண்டிருப்பீர்கள். நான் இன்னவாக நினைத்தேன்; நினைத்தது போலவே நடந்தேறிவிட்டது என்று கூறும் மனிதர்களைக் கண்டிருப்பீர்கள். யதார்த்தம் என்னவென்றால், நினைத்தது போல சிகரம் தொட்ட மனிதர்கள் குறைவு என்பதும் நினைத்ததுபோல உயர்வடையாதவர்கள் அதிகம் என்பதும்தான் ''இது சாத்தியமா'' என்ற வினாவை எமக்குள் விதைக்கின்றன.

**அது எப்படி?**


நினைத்தது போலவே வாழ்வது, வாழ்வில் உயர்வடைவது, இலட்சியக் கனவு நனவாவது எப்படி? என்ற வினாவுக்கு விடை தெரிந்தவர்களாலேயே நினைப்பதுபோல வாழவும் வாழ்வில் உயரவும் முடியும். இதுதான் இதன் இரகசியம். ஆனால், இந்த இரகசியத்தைத் தெரிந்தும் பயனில்லை. ஏன் என்றால் அது கற்பதால் அல்லது அதனை அறிவதால் மாத்திரம் பயன்தரக் கூடிய இரகசியம் இல்லை. அதனை நடைமுறைப்படுத்துவதால், வாழ்வில் பயிற்சி செய்து பழக்கப்படுத்துவதால், அதன்படி வாழ்வதால் மாத்திரமே அந்த இரகசிய மந்திரம் பலனளிக்கும்.

**எண்ணமே வாழ்வு**

உங்கள் ஆழ்மன எண்ணங்களுக்கு, (அதாவது, நீங்கள் எதனை எண்ணுகிறீர்களோ, எதனை நினைக்கிறீர்களோ அந்த எண்ணங்களுக்கு) உங்களை வழிநடத்தி வெற்றி பெறச் செய்யும் சக்தி இருக்கிறது. இதற்கு பல்வேறு பெயர்கள் சொல்லப்படும். தன்னம்பிக்கை, நம்பிக்கையீனம் என்பன இதன் விளைவாகவே ஏற்படுகின்றன.

# நீங்கள் நினைப்பது போலவே...

*ஜே.எம். அஸீம் (நளீமி)*



**உங்கள் எண்ணங்களின் விளைவுதான்**
**உங்கள் எதிர்காலம்**
**உங்கள் எண்ணப்படி,**
**நீங்கள் நினைத்தபடி வளமான எதிர்காலத்தை**
**உங்களால் உருவாக்க முடியும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவன் வெற்றி பெறுவதும் தோல்வி அடைவதும் அவனது சொந்த எண்ணங்களின் விளைவாகவே ஏற்படுகின்றன.

ஒருவன் தோல்வி என்பதை தானாக ஏற்றுக் கொள்ளும் வரை அவன் தோற்பதில்லை. அதாவது, அவன் மனதால் தான் தோற்றுவிட்டேன் என்பதை ஏற்றுக் கொண்டால்தான் அவன் தோல்வியடைகிறான். நீங்கள் அல்லது பிறர் தோல்வியடைந்த சந்தர்ப்பத்தைக் கற்பனை செய்து பாருங்கள். அவர் மனதால் தோல்வியை ஏற்றுக் கொண்டதால்தான் தோல்வியடைந்திருப்பார். மனதால் ஏற்றுக் கொள்ளும் வரை யாரும் தோற்பதில்லை.

எண்ணங்களுக்கு, நீங்கள் உள்ளத்தில் நினைப்பதற்கு, உங்களை இயக்கும் அபார சக்தி இருக்கிறது. தயக்கம், துணிவு எல்லாமே மனதில் தோன்றுபவைதான். இவை உங்களை இயக்கும் அல்லது தடுக்கும். அவை உங்களை இயக்குகின்றபோது வெற்றியை நோக்கிப் பயணிப்பீர்கள்; தடுக்கின்றபோது தோல்வியை நோக்கி நகர்வீர்கள்.

மனம் மற்றும் எண்ணம் அல்லது நீங்கள் நினைப்பது பற்றிய சில யதார்த்தங்களைப் புரிந்து கொள்ளுங்கள். அப்போதுதான் நீங்கள் நினைப்பது போலவே ஆக முடியும்.

உங்கள் எண்ணங்களின் விளைவுதான் உங்கள் எதிர்காலம். உங்கள் எண்ணப்படி, நீங்கள் நினைத்தபடி வளமான எதிர்காலத்தை உங்களால் உருவாக்க முடியும். நல்ல எண்ணங்கள் நல்ல கனிகளைத் தருகின்றன. தீய எண்ணங்கள் தீய கனியைத் தருகின்றன. மனிதன்தான் தன் தோட்டத்தின் (உள்ளத்தினதும் எண்ணங்களினதும்) சொந்தக்காரன். மனம் ஒரு தோட்டம். ஒவ்வொரு மனிதனும் அதனைப் பக்குவப்படுத்தி தன் வாழ்வின் விதையை விதைக்கும் முறையில்தான் அதன் அறுவடை அமைகிறது. 'மனம்' என்ற வளமான மண்ணில் விதைக்கப்பட்ட விதைகளான எண்ணங்களே உங்கள் எதிர்காலத்தைத் தீர்மானிக்கின்றன.

சாத்தியமான ஓர் இலட்சியத்தை இதயத்தில் வைத்து அதை அடைய நீங்கள் முயற்சி செய்ய வேண்டும். அப்போது அது சாத்தியமாகும். எண்ணம் அல்லது என்னவாக வேண்டும் என்ற நினைப்பு இல்லாமல் முயற்சிப்பதாலோ அல்லது முயற்சி இல்லாமல் எண்ணம் என்ற விதைகளை மனதில் தூவுவதாலோ பயன் இல்லை; இவ்விரண்டும் இணைகின்றபோதுதான் பலன் கிட்டும்.

### முயற்சியின்போது...

முயற்சியின்போது நீங்கள் எந்தளவு தூரம் சோதனைகள், தோல்விகள், போராட்டங்களை விரும்பி ஏற்று வெல்கிறீர்கள் என்பது உங்கள் வெற்றியைத் தீர்மானிக்கும். நீங்கள் மேற்கொள்ளும் தியாகங்கள், தளராத உங்கள் முயற்சிகள், விடாது பற்றிக் கொண்ட நம்பிக்கைகள் உங்கள் இதயக் கனவை நனவாக்க உதவும். அவை அனைத்தையும் விட முக்கியம் வெல்ல முடியாததை வெல்ல வேண்டி இருக்கும். அதாவது, பலர் தங்கள் தோல்விகளை ஏற்றுக் கொண்ட இடம். வெல்ல முடியாது என முடிவெடுத்த இடம். அந்த இடத்தில் அந்த வெல்ல முடியாததை நீங்கள் வெல்ல வேண்டும். அப்போதுதான் நீங்கள் நினைத்தது போலவே ஆக முடியும்.

### தோற்றுப் பார்

வெற்றி! வெற்றி! வெற்றி! என்று எப்போதும் வெற்றி நினைப்புடன் இருப்பவர்களையே வெற்றி வந்தடைகிறது. அப்படியானால் ஏன் தோற்க வேண்டும்? தோற்று விடுவேனோ என்ற அச்சம் உங்கள் செயல் வேகத்தைக் குறைத்துவிடும். எனவே, தோல்விக்கு அஞ்ச வேண்டாம். தோற்றாலும் பரவாயில்லை, வெற்றி பெறும் வரை அனைத்தும் தற்காலிகத் தோல்விகளே என்ற யதார்த்தத்தைப் புரிந்து தற்காலிகத் தோல்விகளை எதிர்கொள்ளுங்கள். தோற்றுப் பாருங்கள், வெற்றி கைக்கூடும்.

### சாத்தியமில்லை

உங்களுக்கு எது சாத்தியம், சாத்தியமில்லை, என்பதைத் தீர்மானிப்பவர் நீங்களாகவே இருக்க வேண்டும். மற்றவர்கள் உங்கள் எண்ணங்களுக்கு இது சாத்தியமில்லை என்ற முற்றுப்புள்ளியை வைக்க நீங்கள் இடமளிக்கக் கூடாது. 'சாத்தியம்' என்று நினைத்தால் எதுவும் சாத்தியமே! என்பதை ஆழ் மனதில் பதித்துக் கொள்ளுங்கள்; சாத்தியமாக்கும் வரை சளைக்காமல் உழையுங்கள்.

நீங்கள் நினைப்பது போலவே ஆகுவது அவ்வளவு இலகுவானது அல்ல என்பதையும் அதற்கான விலையைக் கொடுக்க நீங்கள் தயாராக இருக்க வேண்டும் என்தையும் மனதில் இருத்துங்கள். அதனை அடையும் வரை பாடுபடத் தயாரான மனோநிலையை வளர்த்துக் கொள்ளுங்கள். பிறகென்ன? நீங்கள் நினைத்தது போலவே வளமான வாழ்வு வாழ்வீர்கள், வாழ்த்துக்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




விரைவு - உயர்வு - துணிவு

✎ எம்.ஏ. ரியாஸ் மொஹமட் (B.A, PGDE)
கு/இப்/அல் ஹுதா மு.ம.வி, ரிதீகம

# பொதுவான விளையாட்டு தகவல்கள்



- ❖ உலகில் தோன்றிய முதல் விளையாட்டு - ஓட்டப் பந்தயம்
- ❖ உலகின் மிக பழமையான விளையாட்டு - நீச்சல்
- ❖ மனிதன் விளையாடிய முதல் விளையாட்டு - வில்வித்தை
- ❖ இரவில் மட்டும் நடக்கும் பந்தயம் - நாய் பந்தயம்
- ❖ கயிறு இழுத்தல் போட்டி முதன் முதலில் தோன்றிய நாடு - சீனா
- ❖ சீட்டாட்டத்தை கண்டுபிடித்த நாடு - சீனா
- ❖ பணக்கார விளையாட்டு என்றழைக்கப்படும் விளையாட்டு - கோல்ஃப்
- ❖ மல்யுத்த சண்டையின் அதிகபட்ச நேரம் - 12 நிமிடங்கள்
- ❖ இலங்கையில் விளையாட்டுத் துறையில் பட்டப் படிப்பை மேற்கொள்ளக்கூடிய பல்கலைக்கழகம் - களனி
- ❖ இன்று சர்வதேச ரீதியில் பிரசித்தி பெற்ற இலங்கையை சேர்ந்த மோட்டார் வாகன ஓட்டுநர் - திலங்க டி பாலகமுவ
- ❖ கூடைப்பந்து விளையாட்டை அறிமுகப்படுத்திய நாடு - அமெரிக்கா 11-03-1892
- ❖ முப்பது செக்கன்களுக்குள் முடிவடையும் விளையாட்டு - சுமோ

# T20 இறுதிப் போட்டி 2016



- ❍ அரை இறுதிப் போட்டிக்கு இந்தியா, நியூஸிலாந்து, மேற்கு இந்திய தீவு மற்றும் இங்கிலாந்து அணிகள் தெரிவு செய்யப்பட்டன.
- ❍ இறுதிப் போட்டியில் இங்கிலாந்து அணியை மேற்கு இந்திய தீவுகள் அணி வெற்றி கொண்டது. இது மேற்கு இந்திய தீவுகள் அணியின் இரண்டாவது T20 வெற்றியாகும்.

# ஒலிம்பிக் தீபச் சுடர் ஏற்றப்பட்டது

பிரேசிலின் ரியோடி ஜெனீரோவில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிக்கான தீபச் சுடர் ஒலிம்பிக்கின் பிறப்பிடமான கிரேக்கத்தின் ஒலிம்பியாவில் கடந்த ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி ஏற்றப்பட்டது. எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள 31 ஆவது ஒலிம்பிக் விளையாட்டு விழாவுக்கான பண்டைய ஒலிம்பிக் மற்றும் நவீன ஒலிம்பிக் ஆகியவற்றின் சம்பிரதாயங்களை ஒன்றிணைத்தே இத்தீபம் ஏற்றப்படுகிறது.

கிரேக்கத்தில் ஆறு நாட்கள் வலம் வரும் ஒலிம்பிக் தீபச் சுடர் மெரதோனாஸ் நகரம் உட்பட மிக முக்கிய நகரங்கள் வழியாக மொத்தம் 1388 மைல்கள் கொண்டு செல்லப்படும். கிரேக்கத்தில் ஒலிம்பிக் தீபச் சுடரை ஏந்திச் செல்லும் 450 பேரில் சிரியா அகதி ஒருவரும் அடங்குகின்றார். நவீன ஒலிம்பிக் விளையாட்டு விழாவின் முதலாவது அத்தியாயம் 1896 இல் அரங்கேற்றப்பட்ட பனத்தினியாக்கோ விளையாட்டரங்கில் ஒலிம்பிக் தீபச் சுடர் ஓட்டம் நிறைவு பெறவுள்ளது. அங்கு ஒலிம்பிக் தீபச் சுடர் இந்த ஆண்டு ஒலிம்பிக் விளையாட்டு விழாவை நடத்தவுள்ள பிரேசிலிடம் சம்பிரதாயபூர்வமாக கையளிக்கப்படும். நவீன ஒலிம்பிக் வரலாற்றில் ஒலிம்பிக் தீபச் சுடர் ஏற்றப்பட்டு இவ்வருடம் 80 வருடங்கள் பூர்த்தியாகின்றது. இதன் காரணமாக ஒலிம்பிக் சுடர் ஏற்றும் வைபவம் விசேடத்துவம் பெற்றுள்ளது. ஒலிம்பிக் தீபச் சுடர் முதன் முதலில் பேர்லின் 1936 ஆண்டு நடைபெற்ற ஒலிம்பிக் விளையாட்டு விழாவை முன்னிட்டு ஏற்றப்பட்டு தொடர் ஓட்டமாக கொண்டு செல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒலிம்பிக் விளையாட்டு போட்டி



- ஒலிம்பிக்கின் குறிக்கோள் - போட்டிகளில் வெற்றி பெறுவதல்ல; பங்கேற்பதுதான். அதாவது போட்டியிட்டு வெற்றி பெற வேண்டும் என்பதல்ல நோக்கம். பங்கேற்று சிறப்பாக செயற்பட வேண்டும் என்பதாகும்.
- ஒலிம்பிக் கோட்பாடு - விரைவு, உயர்வு, துணிவு
- குறித்த போட்டிக்கான ஒலிம்பிக் சின்னம் - ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறும் நகரை பொறுத்து தெரிவு செய்யப்படுகிறது.
- ஒலிம்பியாட் - ஓர் ஒலிம்பிக் போட்டி தொடங்கிய ஆண்டிலிருந்து அடுத்த ஒலிம்பிக் போட்டி தொடங்கும் வரையிலான நான்கு ஆண்டு காலப்பகுதியாகும்.
- 2016 ஒலிம்பிக் போட்டியை நடத்துவதற்கு பிரேசில் - றியோ டி ஜெனிரோ நகரம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. தென் அமெரிக்க நாடொன்றில் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறுவது இதுவே முதல் தடவையாகும்.

## கண்டங்களும் நிறங்களும்



- பச்சை - அவுஸ்திரேலியா
- நீலம் - ஐரோப்பா
- மஞ்சள் - ஆசியா
- சிவப்பு - அமெரிக்கா
- கறுப்பு - ஆபிரிக்கா

## ஒலிம்பிக் அமைப்பினால் நடத்தப்படும் விழாக்கள்

- பண்டைக்கால ஒலிம்பிக்
- கோடைக்கால ஒலிம்பிக்
- குளிர்கால ஒலிம்பிக்
- பரா ஒலிம்பிக்
- இளையோர் ஒலிம்பிக்

## ஒலிம்பிக் சின்னச் சின்ன தகவல்கள்

- அனைத்து நாடுகளையும் உள்ளடக்கி நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் பழமையும் பிரபலமும் மதிப்பும் மிக்க ஒரு விளையாட்டுப் போட்டி இதுவாகும்.
- உலகிற்கு ஒலிம்பிக் போட்டியை அறிமுகப்படுத்திய நாடு கிறீஸ் ஆகும்.
- 1894 இல் சர்வதேச ஒலிம்பிக் சம்மேளனம் அமைக்கப்பட்டது.
- 1896 இல் நவீன ஒலிம்பிக் போட்டிகள் பியரே கூபரடன் எனும் பிரான்ஸ் நாட்டவரின் முயற்சியால் ஆரம்பிக்கப்பட்டு முதன்முதலாக கிரேக்கநாட்டின் எதென்ஸ் நகரில் நடைபெற்றன. இதில் 13 நாடுகள் பங்கேற்றன.
- 1908 இல் ஒலிம்பிக் போட்டியில் பெண்களும் பங்குபற்றினர்.
- 1920 ஒலிம்பிக் கொடியேற்றும் வழக்கம் ஆரம்பிக்கப்பட்டது.
- இக்கொடியில் இடம்பெறும் ஐந்து நிற வளையங்களும் ஐந்து கண்டங்களும் போட்டிகளில் ஒற்றுமையாக பங்கேற்கும் என்பதை குறிக்கும்.
- 1996 ஆம் ஆண்டு ஒலிம்பிக் நூற்றாண்டு விழா போட்டிகள் நடைபெற்றன.

## இளையோர் ஒலிம்பிக் பற்றிய சில தகவல்கள்

- முதலாவது இளையோர்களுக்கான ஒலிம்பிக் 14 - 08 -2010 சிங்கப்பூரில் ஆரம்பமானது.
- 26 வகையான விளையாட்டுக்கள், 201 தங்கப் பதக்கங்கள், 205 நாடுகள், 3600 வீர வீராங்கனைகள் பங்குபற்றினர்.
- 61 பதக்கங்களுடன் சீனா முதலிடத்தைப் பெற்றது.

# சுழற்பந்து வீச்சாளர் ரங்கன ஹேரத் ஓய்வு

இலங்கை அணியின் சுழற்பந்து வீச்சாளர் ரங்கன ஹேரத் ஒருநாள் மற்றும் சர்வதேச T20 போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றுள்ளார். சுழற்பந்து வீச்சாளர் ஹேரத், இதுவரை 67 டெஸ்ட் (297 விக்கெட்), 71 ஒருநாள் (74 விக்கெட்), 17 சர்வதேச T20 (18 விக்கெட்) போட்டிகளில் விளையாடி உள்ளார்.

# 42 ஆவது தேசிய விளையாட்டு

42 ஆவது தேசிய விளையாட்டு விழா இம்முறை யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ளதாகவும் நான்கு கட்டங்களாக விளையாட்டுப் போட்டிகள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாகவும் வியைாட்டுத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# அந்த சிலரும் நானும்...

உன் மீது விழும்
இம்சைகளின் குரூரத்தில்
கருகிப்போன என் ஆன்மா
ஓ... வென்று அழுது கொள்ள
தூண்டில் மீனாய் துடிக்கிறது

உன் துன்பியல் பற்றிய
அறிதல்களில் - ஏதோ
அமானுஷ்ய வலிகள்
தேகமெங்கிலும்
அபரிமிதமாய் பீய்ச்சப்பட்டு...

ஓ... காஸாவே
நீ வரைந்த சோக
ஓவியம் இதுகாலும்
அமுத வண்ணமே
இருட்டாய்...

காயங்களை கண்ணீரால்
பாடிக் கொள்ளும் - ஓரிலட்சம்
கண்களைக் கொண்ட
புல்லாங்குழல் நீ...

விடியலுக்கான உன்
காத்திருப்பின் நீட்சிதான்
எத்தனை மைல்கள்?

உன் விழி நீர் துடைக்க
துடித்தும்
சேய்மையின்
தூரப்படுத்தலில் - நான்
அங்கவீனனாய்
அர்த்தமற்றுப் போகின்றேன்...

எனினும்
கனதியான நம்பிக்கை
ஒன்றில்
குறைந்த பட்சமாய்
தினம் துஆக்களில் - உன்னை
ஆற்றுப்படுத்துகின்றேன்

இல்லாவிடில்
சோதர வாஞ்சையில்
ஒட்டை விழுந்த
அந்த சிலராய்
நானும் ஆகிடுவேன்...!

ஜே. ஜஹான்கீன்
கண்ணியா - இடிமலை



# என் தாய்

பத்து மாதங்கள் சுமந்தாய்
தொப்புள் கொடியை அறுத்து
உன் உறவாய் என்னை கண்டாய்

குருதியை பாலாய் மாற்றி
என் பசியை நீ போக்கினாய்

பாவம் அறியா பிஞ்சு எனக்கு
பாடங்கள் பல கற்றுத் தந்தாய்

என் விழி தூங்கும் வரை
உன் மொழியால் தாலாட்டு பாடினாய்
உறவுகளோடு இப்பூவுலகையும்
எனக்கு நீ காட்டித் தந்தாய்

வாழ்க்கையில் நான் நட்சத்திரமாய்
பிரகாசிக்கிறேன் அப்போதும் நீ
வானமாய் என் அருகிலே இருக்கிறாய்
மண்ணிலே நான் புதைக்கப்பட்டாலும்
மறக்க முடியாது உன் உதவியை...!

பாத்திமா மிப்ரா பின்த் மனாப்
பு/தில்லையடி முஸ்லிம் ம.வி.
புத்தளம்



# என் வாழ்வு

பாசத்தையும் நேசத்தையும்
சிந்தித்தேன்!
வெற்றியையும் தோல்வியையும்
சந்தித்தேன்!

உயர்வையும் தாழ்வையும்
நிந்தித்தேன்!
எனினும், பரந்திருக்கும்
அல்லாஹ்வின் அருட்கொடைகளை
சிந்திக்க மறந்து விட்டேன்!

எம்.என்.எப். அஸ்னா
அந்நூர் ம.க.
பாணகமுவ

## பேசும் கவிதை - இல 13



- படம் சொல்லும் சேதிகளை கவிதையாக எழுதியனுப்பலாம்.
- கவிதைகள் பத்து வரிகளுக்குள் அமைதல் வேண்டும்.
- எழுதி அனுப்பப்படும் கவிதைகள் கவிதைச் சரத்தில் பிரசுரிக்கப்படுவதுடன், தெரிவு செய்யப்படும் சிறந்த பத்து கவிதைகளுக்கு பரிசாக பெறுமதியான புத்தகங்கள் இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.
- கவிதைகள் தபாலட்டையில் மாத்திரமே எழுதப்படல் வேண்டும்.

**அனுப்ப வேண்டிய இறுதித் திகதி: 2016 மே 20**

அனுப்ப வேண்டிய முகவரி:
அகரம் சஞ்சிகை, 77, தெமடகொட வீதி,
கொழும்பு 09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரிசுக்குரிய ஏனைய கவிதைகள்



### முதலிடம் பெற்ற கவிதை

## அம்மா

பத்து மாதங்கள் எம்மைச் சுமந்து
பக்குவமாய் வளர்த்தவள்
நல்வழியில் செல்ல
பாதையுமானவள்
அன்பு என்ற எழுத்திற்கு
இலக்கணமானவள்
பாசத்தின் அரும் பொருளுமானவள்
புன்னகையின் பூவுமானவள்
அழும்போது என் கண்ணீரை
துடைப்பவள்

✍ எம்.என்.எப். மின்ஹாஜ்
அஸ்ஸிராஜ் ஆண்கள் வித்தியாலயம்
தெல்லங்க

## உனக்காய் என்றென்றும்...

என் தொப்புள்கொடி
சொந்தக்காரியே
என் தொண்டைக் குழியில் என் உயிர்
தொங்கும் வரை
தொடரும் என் பொழுதுகள்
உனக்காய் ஜன்னதுல்
பிர்தௌஸ் கிடைக்கும் வரை
பிரார்த்தனைகளாய் என்றும்...

✍ ஸானாஸ் காஸிம்
முஸ்லிம் பெ.அ.க.
கள் எலிய

## தங்கத் தாய்

வளாகம் செல்லும் வீதியதில்
வயோதிப அன்னை - உன்னை கண்டேன்
வாயில் தவழ்ந்த புன்சிரிப்பால்
வடிவாய் ஈர்த்தாய் உன் அருகில்
அருகே நானும் வந்தவுடன்
அன்பாய் பிடித்தாய் என் கரத்தை
அருந்தவப் புதல்வனென நினைத்தாயோ
அயலவர் மகனென நினைத்தாயோ...
அருவியாய் பாய்ந்தது என் உள்ளமதில்
என் 'தங்கத் தாயின்' நினைவலைகள்!

✍ எம்.என். ஹஸன்
காலி

## தாய்

சிறு வயதில் நான் தாயிடம்
உணர்ந்த பாதுகாப்பை - என்
தாயின் முதுமையில் தாய்க்கு
உணர்த்தி விட்டேன் - இனி என்
மரணம் மகிழ்ச்சியானதாக
இருக்கும்...

✍ லரீப் முஹம்மத் அப்ரின்
மூதூர் - 6

## பாசத்தின் உறைவிடமாய்...

பிறப்பு முதல் இறப்பு வரை
நான் உனக்கு குழந்தைதான்
இன்று நீயும் - ஒரு
வயது முதிர்ந்த குழந்தையாய்
என் அருகில்
உன் கருணை கண்ட என்னுள்
பாசத்தின் உருவெடுத்து
என் மனதில்
மாறா உறைவிடமாய்...

✍ முஜீபா ஸானாஸ்
முஸ்லிம் பெண்கள் அ.க.
கள் எலிய

## பேசு

உதவி எனும் முத்தை சிறிது
நேரம் தொட்டுப் பேசு
அது ஒரு நாள் - உன்னை
தேடி வந்து பேசும்

✍ எம்.என்.எப். நப்லா
மன்/ எருக்கலம்பிட்டி ம.ம.வி.
மன்னார்

## நீதானம்மா!

வான்வெளியிலேயே பிரகாசமே
பூமியிலேயே சந்தோஷம்
வாழ்க்கையிலேயே பரவசமே
என் இறைவன்
தந்த பொக்கிஷமே
தாயே நீதானம்மா!
அமுத மொழி மொழிந்து
தோளோடு தோள் குலுக்கி
மகனே நீ உயர்ந்திடு
என வாழ்த்தியது தாயே
நீதானம்மா!

✍ எப்.ஜே. இக்ரா
அல்/மதீனா ஆ.பா.
புத்தளம்

## உறவுகளையே...

ஏழ்மை எனும் குடிசையினுள்ளே...
அநாதை எனும் பெயருடனே
ஒளி இழந்த விழியுடனே...
உணர்விழந்த
உள்ளத்துடனே
தொலைந்து போன
உறவுகளையே
தொலைவில் தேடுது
உள்ளமே...

✍ எம்.ஐ.எப். இல்மா
குளி/இப் மடிகே மு.ம.வி.
இப்பாகமுவ

## மனிதம்

ஒற்றையடிப் பாதையில்
நீண்ட நிழல் பெருவெளியில்
இரு வேடங்கள்
உண்மையை உணர்த்தும்
காவியமாய் விழி வழியே
நீர் கசியவே - இந்நிழல்
நிஜமானால்
உலகில் மனிதம் வாழும்
அருளும் மீளும்

✍ ஏ.எப். ஹன்ஸா
இஸ்லாஹிய்யா வளாகம்

## தாயன்பு

நீ பார்க்கும் பார்வையில்
நான் மெழுகானேன்
நீ கல்லின் மேல் நடந்து
நான் பஞ்சின் மேல் நடக்கையில்
நீ என்னைச் சுமந்தாய்
நான் உன்னைத் தாங்குவேன்
நான் உனக்கு பிள்ளை
நீயோ எனக்கு குழந்தை
எந்த அன்பும் நிகரில்லை
அதுதான் தாயன்பு

✍ எஸ்.எப். ஸபா
மன்/எருகலம்பிட்டி ம.ம.வி.
மன்னார்

## அன்பின் நிழல்

இளைப்பாற நிழல் தேடி
சென்றேன் நானும்
பாதையோரமாய்
அங்கும் விருட்சமாய்
நிழல் தந்தாய் நீயும்
உன் அன்பாலே
தாயே!

✍ ஹஸ்னா பேகம் பஃலூன்
ஆலங்குடா - ஏத்தாளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஹனீபா ஏ. வஹாப் (இஸ்லாஹி)
BA, Dip.in Counseling (NISD), PGD in Psychology (Peradeniya)

# போதையும் மாணவர்களின் பாதையும்...?

10. இபாதத் விடயத்தில் அதிகம் ஈடுபடுங்கள்.
11. இஸ்லாத்தோடு இறுக்கமான சகபாடிகளை தமது நண்பர்களாக ஆக்கிக் கொள்ளுங்கள்.
12. நீங்கள் புகைப்பதிலிருந்து விடுபடுவதால் உங்களுக்கும் உங்களைச் சுற்றியிருப்பவர்களுக்கும் நாட்டுக்கும் நாட்டின் பொருளாதாரத்திற்கும் பெரும் பங்காற்றுகிறீர்கள் என்ற மனப்பதிவை உள்ளத்தில் ஏற்படுத்திக் கொள்ளுங்கள்.
13. புகைத்தலை விடுவதால் உதடுகளும் முரசுகளும் கறுக்காத, பொலிவான முகத்துடன் இளமை ததும்பும் தோற்றத்துடன் வசீகரிக்கும் ஆளுமையாக இருப்பதை எண்ணி அடிக்கடி சந்தோஷப்படுங்கள்.

**புகைத்தலை விடுவதால் நீங்கள் அடையும் இலாபங்கள்**

- 20 நிமிடங்களின் பின்பு இதயத்துடிப்பின் வேகம், குருதியமுக்கம் ஆகியன சாதாரண நிலையில் இருக்கும்.
- ஒரு மணித்தியாலத்தின் பின்பு சிகரட் நாற்றம் விலக ஆரம்பமாகும்.
- 08 மணித்தியாலத்தின் பின்பு தேவையற்ற காபன் மொனொக்சைட்டு உடலிலிருந்து வெளியேறும்.
- 05 நாட்களின் பின்பு அதிகமான நிகொட்டின் உடலிலிருந்து வெளியேறும்.
- ஒரு வாரத்தின் பின்பு நாற்றம், மணம், சுவை என்பன நன்கு உணர ஆரம்பிக்கும்.
- ஒரு மாதத்தின் பின்பு அவலட்சணமாகிய தோற்றம் சாதாரண நிலைக்கு வரும்.
- 11 வாரங்களின் பின்பு நுரையீரலானது மீண்டும் சுத்திகரிக்கும் திறனைப் பெற்றுக் கொள்ளும்.
- 03 மாதங்களின் பின்பு மீண்டும் நுரையீரலின் செயற்பாடு 30% மாக அதிகரிக்கும்.
- ஒரு வருடத்தின் பின்பு இதய நோய் அவதானம் அரைவாசியளவு குறையும்.
- ஒரு வடத்தின் பின்பு நாளொன்றுக்கு 05 சிகரட் புகைக்கும் ஒருவர் 5450 ரூபாய் மீதப்படுத்தியிருப்பார்.

✎ தகவல் ADIC நிறுவனம்

**நீங்கள் புகைக்காதவராயின்,**

1. புகைத்தலைத் தூண்டும் காரணிகள் தொடர்பில் எச்சரிக்கையோடு நடந்து கொள்ளுங்கள்.
2. புகைப்பதால் ஏற்படும் சகலவிதமான பாதிப்புகள், நஷ்டங்களையும் கருத்திற்கொண்டு வருமுன் காத்துக் கொள்ள முயற்சி செய்யுங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. புகைத்தலில் அப்படி என்ன இருக்கிறது என்ற விஷப்பரீட்சையை ஒரு நாளும் செய்ய முற்பட வேண்டாம்; அது முட்டாள்தனமே.

4. நீங்கள் பழகும் நண்பர்கள் புகைப்பவர்களாயின் அவர்களுடைய சகவாசத்தைத் துண்டித்து விடுங்கள். அவர்களுடைய உறவை விட உங்களுடைய எல்லாவிதமான ஆரோக்கியமே முக்கியமாகும்.

5. புகைப்பதன் மூலம் நாம் ஏன் வெளிநாட்டுக் கம்பனிகளுக்கு வருமானமீட்டிக் கொடுக்க வேண்டும் என்ற கேள்வியை மனதில் அடிக்கடி வினவிக் கொள்ளுங்கள்.

6. வீட்டில் புகைப்பவர்கள் இருப்பின் அவர்களுக்கு அதன் பாரதூரத்தைத் தெளிவு படுத்துவதோடு இரண்டாம் நிலைப் புகைத்தல் மற்றும் மூன்றாம் நிலைப் புகைத்தல் தொடர்பில் தெளிவினை ஏற்படுத்துங்கள்.

7. நீங்கள் சமூக நலனில் அக்கறை கொண்டவராயின் மூன்றாம் நிலைப் புகைத்தல் குறித்து உமது நண்பர்களுக்கும் ஏனைய சமூக அங்கத்தவர்களுக்கும் தெளிவுபடுத்துங்கள்.

8. போதைப்பொருளுக்கு அடிமையாக்குவதற்கான அத்திவாரம் புகைத்தலே என்பதால் இது குறித்து எச்சரிக்கையாக நடந்து கொள்வதோடு உமது நண்பர்களையும் பாதுகாக்க முயற்சி செய்யுங்கள்.

உலக சுகாதார நிறுவனத்தின் ஆய்வு முடிவுகளின் படி புகைத்தலுக்கு எதிரான விளம்பரங்கள், ஊர்வலங்கள், சட்டங்கள், சிகரட் பெட்டிகளில் 80% எச்சரிக்கைச் செய்திகள் போன்றவற்றினூடாக இலங்கையில் புகைப்பவர்களின் வீதம் குறைந்து வருவதாக நம்பப்படுகிறது.

எவ்வாறாயினும், நாம் சிற்றின்பம் எனக் கருதி எம்மை அழிவிற்குள்ளாக்கும் புகைத்தலால் அல்லாஹ்வின் கட்டளைகளை மீறிய குற்றத்துக்காக மறுமையிலும் தண்டனைகளுக்கு முகங்கொடுக்க நேரிடுகிறோம். புகைத்தலால் உலகிலும் பலனில்லை மறு உலகிலும் பலனில்லை எனும்போது ஏன் அழிவை விலைக்கு வாங்க வேண்டும்? இவ்வாறான செயல் அறிவுள்ள ஆளுமைகளின் உன்னத தெரிவாகுமா என்பதை உள்ளத்தில் கை வைத்துக் கேட்டுப் பாருங்கள்! உங்கள் உள்மனம் உண்மை சொல்லும்.

**உசாத்துணைகள்:**


1. Lucas, G.N., (2011). Third-hand smoke and children. Sri Lanka Journal of Child Health. 40(3), pp.87–89. DOI: http://doi.org/10.4038/sljch.v40i3.3505
2. Katulanda et al.(2012).Tobacco Smoking Among School Children in Colombo District, Sri Lanka. Asia – Pacific Journal of Public Health. XX(X), pp. 1-10. DOI: 10.1177/1010539512439228
3. Tamil leaflet, Obe – Daruwa Tamil 02. (2013, January 25). Accessed on 22nd March 2016. Retrieved from : http://www.adicsrilanka.org/2013/01/25/Tamil-leaflet/
4. Tamil-Free-Cigarette-for-youth-form. (2013, January). Accessed on 22nd March 2016. Retrieved form: http://www.adicsrilanka.org/wp-content/uploads/2013/01/Tamil-Free-Cigarette-for-youth-form.pdf


**சிந்தனைக்கு...**

**மனித வாழ்க்கையில் குழந்தைப் பருவம் முதல் முதுமைப் பருவம் வரை நெருக்கமான தொடர்பு கொண்டிருப்பது படிப்பு ஆகும்.**

*காலை எழுந்தவுடன் படிப்பு - பின்பு*
*கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு*
*மாலை முழுவதும் விளையாட்டு - என்று*
*வழக்கப்படுத்திக் கொள்ளு பாப்பா*
*என பாட்டுக்கொரு புலவர் பாரதியார் குறிப்பிட்டார்.*

*அதிகாலை நேரத்தில் எழுந்து படிக்கின்றபோது படிக்கின்ற கருத்துக்கள் நமது மனதில் ஆழமாகப் பதியும். அதனால், காலை நேரத்தில் படிப்பதை வழக்கமாக்கிக் கொள்ளுங்கள் என்பது பாரதியாரின் கருத்தாகும்.*

*குறைந்தபட்சம் ஓர் ஆண்டில் 24 புத்தகங்களையாவது படிக்க வேண்டும் என்று குறிப்பிட்டு படிப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறார் புகழ்பெற்ற டாக்டர் ஹெர்பர்ட். இந்த 24 புத்தகங்களை படிப்பதற்கு நேரத்தை எப்படி ஒதுக்க வேண்டும்? என்றும் அவர் குறிப்பிடுகிறார்.*

*ஒரு நாளைக்கு 15 நிமிடங்கள் படியுங்கள். வாரத்திற்கு 1 3/4 மணி நேரம் கிடைக்கிறது மாதத்திற்கு 7 மணி நேரம் கிடைக்கிறது.*

*ஒரு நல்ல புத்தகத்தைப் படிப்பதற்கு 3 மணி நேரம் போதும். எனவே, மாதத்திற்கு சுமார் 2 புத்தகங்களைப் படிக்கலாம். மொத்தம் ஆண்டிற்கு 24 புத்தகங்களைப் படிக்கலாம். டாக்டர் ஹெர்பர்ட் கூறிய கருத்து மிக முக்கியமான ஒன்றாகும்.*

*பாலர் வகுப்பு முதல் பட்டப் படிப்பு வரை சுமார் 18 ஆண்டுகள் செலவழித்து பள்ளிகளிலும்-கல்லூரிகளிலும் படிப்பது எப்படி? என்பதை இளம் பருவத்தினர் கற்றுக் கொள்கிறார்கள். சுமார் 18 ஆண்டுகள் பாடங்களைப் படித்த பின்பும் "நீங்கள் என்ன படித்தீர்கள்?" என்று கேட்டால் அதற்கான விளக்கமான பதிலை சொல்வதற்கு இன்று பலர் தயங்குகிறார்கள். எதைப் படித்தோம், எப்படிப் படித்தோம் என்பதை முழுமையாக அறியாமலேயே பட்டம் பெற்றவர்களும் உண்டு.*

*அறிவைப் பெருக்குவதற்கும் திறமைகளை வளர்ப்பதற்கும் படிப்பு ஓர் அடித்தளமாக அமைகிறது. சிறந்த முறையில் படித்தவர்கள் தங்களது நற்பண்புகளை நல்ல முறையில் வளர்த்துக் கொள்கிறார்கள். பள்ளி-கல்லூரிகளில் படிக்கும் போதே அறிவைப் பெருக்குவதற்கு உதவும் பல நல்ல நூல்களைக் கண்டறிந்து படிப்பது ஒரு மனிதனுக்கு அவசியத் தேவையாகும். இதனால்தான், கல்வி நிலையங்களில் நூலகங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்



**நேரம் 45 நிமிடம்**

**வினாப்பத்திரம் I**




ஆசிரியர்கள்: எஸ்.ஐ.எல். முஸம்மில்,எம்.எம். முபாரக்

ஒவ்வொரு வினாவுக்குமான விடையை தரப்பட்ட மூன்று விடைகளிலிருந்து தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.


முதல் உருவிற்குச் சமனான உருவைத் தெரிவு செய்க.

01.




i. ii. iii.

02.




i. ii. iii.

**கீழே தரப்பட்ட அமைப்பை நன்கு அவதானித்து 3 ஆம், 4 ஆம் வினாக்களுக்கு விடை தருக.**





03. X இன் ஊடாக பார்க்கும்போது கிடைக்கும் அமைப்பு யாது?



i. ii. iii.


04. Y இன் ஊடாக பார்க்கும்போது கிடைக்கும் அமைப்பு யாது?



i. ii. iii.

**5 ஆம் 6 ஆம் வினாக்களில் மிக நெருங்கிய தொடர்புடைய உருக்களைக் குறிக்கும் எழுத்துக்கள் உள்ள விடையின் கீழ் கோடிடுக.**

05.




i. Cஉம் Eஉம் ii. Aஉம் Fஉம் iii. Aஉம் Dஉம்

06.




i. Cஉம் Eஉம் ii. Aஉம் Fஉம் iii. Aஉம் Dஉம்

07. அருகிலுள்ள சந்திரனின் வடிவம் பௌர்ணமி தினத்திலிருந்து எத்தனையாம் நாள் தோன்றும்?




i. 3 ஆம் நாள்
ii. 8 ஆம் நாள்
iii. 5 ஆம் நாள்

08. இளம் பருவத்தில் பால் குடித்து வளரும் பிராணி எது?

i. முதலை ii. ஆந்தை iii. பிளற்றிபஸ்

**பின்வரும் தகவலின் அடிப்படையில் 9 ஆம் 10 ஆம் வினாக்களுக்கு விடை தருக.**



ரூபா. 54.00 ரூபா 32.00 ரூபா. 324.00

09. ஒரு புத்தகத்தின் விலை எவ்வளவு?

i. ரூ. 170.00 ii. ரூ. 80.00 iii. ரூ.150.00

10. 2 பென்சில், 2 அடிமட்டத்தின் விலை எவ்வளவு?

i. ரூ. 42.00 ii. ரூ. 44.00 iii. ரூ. 78.00

11. சிலர் கடைக்குச் சென்று அப்பிள் பழங்கள் வாங்கினர். இதில் ரஜனியை விட கமலி 2 மடங்கு பழம் வாங்கினாள். ஆனால், விமல் கமலியை விட 2 மடங்கு அப்பிள் வாங்கினான். அப்பிள் பழமொன்றின் விலை ரூபா. 20 எனின், மூவரும் வாங்கிய பழங்களின் மொத்த விலை ரூபா 700 ஆயின், கமலி வாங்கிய பழங்கள் எத்தனை?

i. 5 ii. 10 iii. 8

12. விவசாயிகளுக்கு பல்வேறு விதத்தில் உதவி செய்யும் பிராணி எது?

i. கறையான் ii. வண்டுகள் iii. தேனீ

13. அஞ்சல் அலுவலகத்தில் தந்தியொன்றை அனுப்புவதற்கு தேவையான சாதனம்?

i. கைபேசி ii. தொலைபேசி
iii. கணினி

14. வானத்தில் மிக உயரத்தில் பறக்கும் பறவை?

i. ஆட்காட்டி ii. புறா iii. கழுகு

15. கிராமப்புற விவசாயிகள் நெல் தானியங்களை தூற்றுவதற்கு முக்கோண வடிவில் அமைக்கும் உபகரணத்தின் பெயர் என்ன?

i. ஏத்து ii. அவுரி iii. பரண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. ஒரு மூட்டையிலுள்ள சீனியை 750 கிராம் கொண்ட 30 பக்கற்றுகளாக பொதி செய்யப்பட்டன. மூட்டையில் இருந்த சீனி எவ்வளவு?

i. 20 kg 800 g   ii. 22 kg 500 g
iii. 23 kg 500 g

17.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3 | 9 | 9 | i. 4 | ii. 4 | iii. 6 |
| 4 | … | 8 | 3 | 4 | 2 |
| 8 | … | 7 | | | |

18. இன்று புதன்கிழமை நேற்று முன்தினம் 16 ஆம் திகதியாகும். அவ்வாறெனின் நாளை மறுதினம் எத்தனையாம் திகதி?

i. 18   ii. 19   iii. 20

19. 4, 8, 2, 5, 3, 9, 12, 22, 15, 7 அருகிலுள்ள பெட்டியினுள் எத்தனை இரட்டை எண்கள் உள்ளன?

i. 4   ii. 6   iii. 5

**பின்வரும் தகவலைப் பயன்படுத்தி 20 ஆம், 21 ஆம் வினாக்களுக்கு விடை தருக.**

ஒரு வகுப்பிலுள்ள மாணவர்கள் சிலரின் பிறந்த தினங்கள் தரப்பட்டுள்ளன.

சந்திரன் 2003.01.25   கீதா 2003.08.30
விதுரன் 2002.12.30   சேரன் 2002.08.18

20. மேலே தரப்பட்ட விபரங்களுக்கு ஏற்ப சரியான கூற்று எது?

i. சேரன் கீதாவிலும் மூத்தவன்
ii. விதுரன் சந்திரனிலும் இளையவன்
iii. கீதா சந்திரனிலும் மூத்தவள்

21. இந்த நான்கு மாணவர்களிலும் வயதில் மிகவும் மூத்தவர் யார்?

i. சந்திரன்   ii. சேரன்   iii. விதுரன்

22. ஒருவர் தனது மாத வருமானத்தில் 3/10 பங்கை உணவுக்காகவும் 2/10 பங்கை வைத்தியத்துக்காகவும் 1/10 பங்கை தர்மத்திற்கும் செலவிட்டார். அவரிடம் மீதியாக இருந்த பணம் ரூ. 6000 எனின், குறித்த நபரின் வருமானம் எவ்வளவு?

i. ரூ. 150,000   ii. ரூ. 20,000   iii. ரூ. 15,000

23. உச்சிகளையும் நேர் விளிம்புகளையும் கொண்டிராத திண்ம உரு எது?

i. சதுரமுகி   ii. கூம்பு   iii. உருளை

24. ஒரு தெருவில் விழாவொன்றுக்காக இரு மின் கம்பங்களுக்கு இடையே 3 கொடிகள் தொங்க விடப்பட்டுள்ளன. மின் கம்பங்களுக்கிடையே மொத்தம் 36 கொடிகள் தொங்க விடப்பட்டிருப்பின், அங்குள்ள மின் கம்பங்களின் எண்ணிக்கை?

i. 12   ii. 13   iii. 14

25.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 3 | 8 | 4 | 6 | 1 | 9 | 5 | 3 |
| 17 | | 22 | | 10 | | …. | |

i. 8   ii. 18   iii. 28

26. 2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி வியாழக்கிழமை எனின், பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி என்ன கிழமை?

i. வெள்ளி   ii. சனி   iii. புதன்

27. இயற்கை நார்/நூல் வகைகளில் மிகவும் வலிமையான பட்டு நூல் எதிலிருந்து பெறப்படும்?

i. தாவரம்   ii. பட்டுப் பூச்சி
iii. பருத்திப் பஞ்சு

28. மாடு ரெண்டும் மாவெள்ளை, வணிக ரெண்டும் தஞ்சாவூரு… எனும் பாடல் எச்சந்தர்ப்பத்தில் பாடப்படும்?

i. வயல் உழுதல்   ii. வண்டி ஓட்டுதல்
iii. அரிவி வெட்டுதல்

29. ஒருவருக்கும் தீங்கு செய்யாமை அல்லது இம்சை செய்யாமை என்பதை விளக்கும் தனிச்சொல் எது?

i. காருண்யம்   ii. அஹிம்சை
iii. சத்தியாக்கிரகம்

30. உயர்திணை, ஆண்பால், பன்மை, படர்க்கை ஆகியவற்றை குறிக்கும் சொல்?

i. சிறுவர்கள்   ii. பிள்ளைகள்
iii. அண்ணன்மார்

31. பின்வரும் சொற்களில் குணப்பெயர்?

i. மூக்கு   ii. செலவு
iii. கசப்பு

32. பின்வரும் வினைச் சொற்களில் வினையெச்சம் எது?

i. பாடினான்   ii. விளையாடுகிறாள்
iii. தரித்து

33. நீதிமன்றத்தில் வழக்கொன்றின் இறுதியில் நீதிபதியால் வழங்கப்படுவது?

i. தீர்ப்பு   ii. நியாயம்   iii. தண்டனை

34. ஒரு குளிர்பான போத்தல் 12 பேரை உபசரிக்கப் போதுமானது. 62 பேரை உபசரிக்க எத்தனை குளிர்பான போத்தல்கள் தேவை?

i. 5   ii. 6   iii. 7

35. வரிசையொன்றில் ரவிக்கு வலது புறத்தில் ராதா நிற்கிறாள். ராதாவுக்கு இடது பக்கத்தில் 12 பேர் நிற்கின்றனர். ராதவுக்கு வலது பக்கத்தில் சிவா நிற்கின்றான். சிவாவுக்கு வலது பக்கத்தில் 15 பேர் நிற்கின்றனர் எனின், இந்த வரிசையில் உள்ளவர்கள் எத்தனை பேர்?

i. 27   ii. 28   iii. 29

44ஆம் பக்கம் பார்க்க...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்



நேரம் 1 மணி 15 நிமிடம்

வினாப்பத்திரம் II



ஆசிரியர்கள்: எஸ்.ஐ.எல். முஸம்மில், எம்.எம். முபாரக்

01. பின்வரும் பந்தியை வாசித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.

மகாத்மா காந்தி ஒரு மகா ஆத்மா. அவருடைய பொக்கைவாய்ச் சிரிப்பும் அன்பான பார்வையும் தூய வெள்ளை நிறமுடைய கதர் ஆடையும் யார் மனதையும் வசீகரிக்கக் கூடியன. அவருடைய உபதேசம் என்றால் அதைக் கேட்க விரும்பி மக்கள், பிள்ளைகள் கூடுவர். அவரது உபதேசங்கள் அவ்வளவு கவர்ச்சியானவை. கற்றவர்க்கும் கல்லாதவர்க்கும் அவரது உபதேசங்கள் ஏற்புடையன.

1. மகாத்மா காந்தியின் உபதேசங்கள் யாருக்கு ஏற்புடையன?
2. பந்தியில் வந்துள்ள குணப்பெயர் ஒன்று தருக.
3. பந்தியில் இடம்பெற்ற படர்க்கைப் பன்மை எதிர்கால வினைச்சொல் ஒன்று தருக.
4. மக்கள் என்தன் ஒத்த சொல் ஒன்று தருக.
5. மகாத்மா என்பதனை பிரித்தெழுதுக.
6. அவரது உபதேசங்கள் எவ்வாறானவை?

02. சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியம் ஆக்குக.

காலை / வேளைகளிலும் / பல் / மாலை / துலக்குதல் / வேண்டும் / நாம்/ இரு

03. பின்வரும் பழமொழிகளின் கருத்தை எழுதுக.

1. அஞ்சியவன் கண்ணுக்கு ஆகாயமெல்லாம் பேய்
2. உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா?

04. பின்வரும் மரபுத் தொடர்களின் கருத்தைத் தருக.

1. ஈயோட்டுதல்
2. சீட்டுக் கிழித்தல்

05. பின்வரும் பழமொழியின் கருத்தைத் தருக?

1. வேலியே பயிரை மேய்ந்தது.
2. ஆனைக்கொரு காலம் பூனைக்கொரு காலம்

06. பின்வரும் ஒவ்வொரு சொல்லுக்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லைத் தருக.

1. செவ்வாய்க் கிழமை
2. வெள்ளை
3. விளையாட்டு மைதானம்

07. பின்வரும் ஆங்கில வார்த்தைகளின் கருத்தை தமிழில் தருக.

1. Let's go to the school
2. Is it your pencil?
3. I am a girl

08. பின்வரும் வாக்கியங்கள் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தினை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.

1. நீ நேற்று வந்தாயா?
2. தம்பி வேகமாக ஓடுகிறான்.

09. பின்வரும் வாக்கியத்தின் கருத்தை தமிழில் எழுதுக.

1. ஒயாகே வயச கீயத?
2. மட ஹரிம சந்தோசய்

10. 'ஒற்றுமை' எனும் தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு மேல் இடம்பெற வேண்டும். எழுவாய், பயனிலை தொடர்புகள் சரியாக அமைதல் வேண்டும்.


விடை தருக.

1. சனுஜனிடம் குருவைப்போல 6 மடங்கும் மேலதிகமாக ரூபா 20 பணமும் இருந்தது. இருவரிடமும் உள்ள பணத் தொகை ரூபா 720 எனின், சனுஜனிடம் உள்ள பணத் தொகை யாது?
2. 6 மீற்றர் நீளமுள்ள கம்பித் துண்டு ஒன்றில் 1 மீற்றர் 75 சென்றி மீற்றர் நீளமான ஒரு துண்டு வெட்டப்பட்டு அகற்றப்பட்டதன் பின்னர் மீதியான கம்பியின் நீளம் என்ன?
3. i. இரண்டால் வகுபடும்போது மீதியில்லாத எண் எது?
   ii. மூன்றால் வகுபடும்போது 1 மீதியாகும் எண் எது?
4. கலை நிகழ்ச்சி ஒன்றைப் பார்வையிட முதல் நாள் 799 பேர் வருகை தந்தனர். இரண்டாம் நாள் முதல் நாள் வருகை தந்தோரைவிட 33 பேர் கூடுதலாக வந்தனர். மூன்றாம் நாள் இரண்டாம் நாளைவிட 12 பேர் கூடுதலாக வந்தனர். எனின், மூன்று நாட்களிலும் கலை நிகழ்ச்சியினை பார்வையிட வந்தோர் எத்தனை பேர்?



AHARAM அகரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. 


அருகிலுள்ள கனவுரு வடிவான பெட்டியொன்றின் மேற்பரப்பின் மொத்தப் பரப்பளவைக் காண்க.

6. ஒரு மோட்டார் சைக்கிளில் ஒரு நகரிலிருந்து இன்னொரு நகருக்குச் சென்ற தூரம் கதிமானியில் பின்வருமாறு இருக்கிறது. | 0 | 7 | 8 | 9 | 9 | கிலோ மீற்றர். மோட்டார் சைக்கிள் இன்னும் ஒரு கிலோ மீற்றர் தூரம் சென்ற பின்னர் கதிமானியில் காணப்படும் வாசிப்பை கட்டங்களினுள் இடுக. | | | | | | Km

7. விமலிடம் இருந்த பணத்தொகை ரூ. 500 ஆகும். அவன் அதில் 1/2 பங்கை உணவிற்கும் மீதியில் 1/2 பங்கை கல்விக்காகவும் செலவு செய்தான் எனின், விமலன் கல்விக்காக செலவழித்த தொகை யாது?


8. விமானமொன்று காலை 9.25 இற்கு புறப்பட்டு 3 மணி 35 நிமிடப் பயணத்தின் பின்னர் இன்னுமொரு விமான நிலையத்தினை வந்தடைந்தது. விமானம் வந்திறங்கிய நேரத்தினை நியம நேரத்தில் தருக.

9. 6 மீற்றர் நீளமும் 5 மீற்றர் அகலமும் கொண்ட சுவருக்கு வர்ணம் பூசுவதற்கு 500 மில்லி லீற்றர் பூச்சு தேவை எனின், 10 மீற்றர் நீளமும் 6 மீற்றர் அகலமும் கொண்ட சுவருக்கு வர்ணம் பூச எவ்வளவு பூச்சு தேவை?

10. விருந்தொன்றில் 5 பேருக்கு சமைப்பதற்கு 1 கிலோ கிராம் அரிசி தேவை எனின், அவ்விருந்தில் 32 பேர் கலந்து கொள்வாரெனின், சமைக்கத் தேவையான அரிசியின் நிலையை கிலோ கிராமில் தருக.

11. நளினா மக்கள் வங்கியில் 5000 ரூபாவினை வைப்பிலிட்டாள். அவளுக்கு மாதமொன்றுக்கு 100 ரூபாவிற்கு 20 ரூபா வட்டியாக கிடைக்குமெனில், ஒரு மாத முடிவில் அவளுக்கு கிடைக்கும் வட்டித் தொகை எவ்வளவு?

12. சுருக்குக. 2/4 + 3/12

13. 

தரப்பட்டுள்ள உருவில் 1/3 பகுதிக்கு நிறந்தீட்டுங்கள்.

14. 2 லீற்றர் பாலுக்கு 750 மில்லி லீற்றர் சீனிக்கரைசலும் 500 மில்லி லீற்றர் நீரும் சேர்த்து பால்த் தேநீர் தயாரிக்கப்பட்டது. தயாரிக்கப்பட்ட தேநீரை லீற்றர், மில்லி லீற்றரில் தருக.

15. 0.0017 ஐ சாதாரண பின்னமாகத் தருக.

**1-30 வரையான வினாக்களுக்கு சரியான விடையின் கீழ் கீறிடுக.**

1. கடற்கரைப் பிரதேசங்களில் வளரும் தாழை மரங்கள் காற்றினால் சரிந்து விழுவதைத் தடுக்க அவற்றில் காணப்படும் விஷேட அம்சம்.

i. ஆழமான வேர்த் தொகுதியைக் கொண்டிருத்தல்.
ii. மிண்டி வேரைக் கொண்டிருத்தல்.
iii. உறுதியான வேர்த் தொகுதி காணப்படுதல்
iv. மரங்கள் குட்டையாக வளருதல்.

2. மலைநாட்டில் பயிரிடும் பயிர்களுக்கு சேதம் விளைவிக்கும் பிராணி எது?

i. செண்பகம் ii. நத்தை
iii. அட்டை iv. தேள்

3. பற்களின் ஆரோக்கியத்தைப் பேண பற்பசையுடன் சேர்க்கப்படும் கனியுப்பு எது?

i. கல்சியம் ii. புளோரைட்
iii. குளோரீன் iv. இரும்பு

4. ஒருவர் சொந்தக் கையெழுத்தினால் எழுதப்பட்ட தகவல்களையும் வரைபடங்களையும் உலகிலுள்ள எந்தவொரு நகருக்கும் அனுப்ப உதவும் நவீன தொடர்பாடல் எது?

i. மின்னஞ்சல் ii. இணையம்
iii. தொலைநகல் iv. ரெலெக்ஸ்

5. விட்டமின் B குறைபாட்டினால் ஏற்படும் நோய்?

i. மாலைக்கண் ii. அனிமியா
iii. பெரிபெரி iv. என்புருக்கி

6. இலங்கையின் மிக அழகான நீர் வீழ்ச்சியான துன்கிந்த காணப்படும் மாவட்டம் எது?

i. பதுளை ii. இரத்தினபுரி
iii. நுவரெலியா iv. மாத்தளை

7. துவிச்சக்கர வண்டியொன்று இரவு வேளையில் பயணிப்பதற்கு அதில் அவசியம் இருக்க வேண்டிய துணைப்பகுதி?

i. மணி ii. ஆசனம்
iii. தடுப்பு (பிறேக்) iv. தைனமோ

8. பகல் வேளையில் எலிவளை, புற்றுகள், கற்குவியல் போன்ற இடங்களில் மறைந்திருக்கும், இரவு வேளையில் உணவு தேடி நடமாடும் பிராணி எது?

i. எலி ii. ஆந்தை
iii. பாம்பு iv. வௌவால்

9. மனிதனின் குழந்தைப் பருவத்தில் வாய்க்குழியினுள்ளே காணப்படும் பற்களின் எண்ணிக்கை

i. 20 ii. 24
iii. 32 iv. 28

10. ராணி, வேலையாள், சோம்பேறி எனும் அங்கத்தவர்களைக் கொண்ட சமுதாய வாழி

i. வீட்டு ஈ ii. தேனீ
iii. அந்துப்பூச்சி iv. எறும்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விடைகள்**

01\. 1. கற்றவருக்கும் கல்லாதவருக்கும்
2. சிரிப்பு, வெள்ளை
3. ஏற்புடையன
4. மாந்தர்
5. மகா ஆத்மா
6. கவர்ச்சியானவை

02\. நாம் காலை மாலை இரு வேளைகளிலும் பல் துலக்குதல் வேண்டும்.

03\. 1. மிகை அச்சம் ஆபத்தானது.
2. வீண் ஆசை தேவையற்றது.

04\. 1. தொழிலின்றி இருத்தல் / வியாபாரமின்றி இருத்தல்
2. வேலையை விட்டு நீக்குதல்


05\. 1. பாதுகாப்பவரே பாதகம் செய்தல்
2. காலம் மாறி வரும்

06\. 1. Tuesday
2. White
3. Play Ground

07\. 1. பாடசாலைக்கு செல்வோம்
2. இது உன்னுடைய பென்சிலா?
3. நான் ஒரு பெண்

08\. 1. ஓயா ஈயே ஆவாத?
2. கல்வி வேகயென் துவனவா

09\. 1. உங்களுடைய வயது எத்தனை
2. எனக்கு மிகவும் மகிழ்ச்சி

1. 620 ரூபாய்கள்
2. 425 cm
3. 262
262
4. 2480 பேர்
5. $65\ m^2$
6. 0 7 9 0 0 Km
7. ரூ. 125.00
8. 13:00 h
9. 1l
10. 6 Kg 400 g
11. ரூ. 100.00
12. 9/12
13\.

14. 3 l 250 ml
15. 17/1000

### 41 ஆம் பக்கத் தொடர்...

36\. பின்வருவனவற்றுள் கோபம் தணியாது அடங்கியிருப்பதைக் குறிக்கும் உவமைத் தொடர்?
i. கல்லில் நார் உரிப்பது போல
ii. பாம்புக்கு பால் வார்த்தது போல
iii. நீறு பூத்த நெருப்பு போல

37\. பழ மரத் தோட்டத்தில் நிதமும் இருப்பது?
i. காய்கள் ii. இலைகள்
iii. பூக்கள்

38\. குறித்த பிரதேசமொன்றில் வாழும் மக்களுக்கு வெள்ள அபாயம் பற்றி எச்சரிக்கை விடுத்து அவர்களை உடனடியாக பாதுகாப்பான இடத்திற்கு செல்லும் படி அறிவிக்க பொருத்தமான தகவல் தொடர்பு சாதனம் எது?
i. வானொலி ii. தொலைக்காட்சி
iii. ஒலிபெருக்கி

39\. இலங்கையின் பண்டைய வரலாற்றை அறிந்து கொள்ள உதவும் நூல் எது?
i. திரிபீடகம் ii. மகாவம்சம்
iii. மணிமேகலை

40\. மஞ்சள் நிற காய்கறிகள், பழவகைகளை சேர்த்துக் கொள்வதால் எந்த நோயிலிருந்து பாதுகாப்பு பெறலாம்?
i. ஸ்கேவி ii. மாலைக்கண்
iii. பெரிபெரி

**விடைகள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | i | 15. | ii | 29. | ii |
| 2. | iii | 16. | ii | 30. | iii |
| 3. | i | 17. | ii | 31. | iii |
| 4. | ii | 18. | iii | 32. | iii |
| 5. | iii | 19. | iii | 33. | i |
| 6. | iii | 20. | i | 34. | ii |
| 7. | ii | 21. | ii | 35. | iii |
| 8. | iii | 22. | iii | 36. | iii |
| 9. | iii | 23. | iii | 37. | ii |
| 10. | ii | 24. | ii | 38. | iii |
| 11. | ii | 25. | iii | 39. | ii |
| 12. | iii | 26. | ii | 40. | ii |
| 13. | ii | 27. | ii | | |
| 14. | iv | 28. | ii | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணங்களின் வண்ணங்கள் - 09

## தலைப்பு: மீனவர்கள்

### பரிசில்களை பெறும் சித்திரங்கள்



எம்.எம்.எப். மிப்லா
பு/கல்/திகழி மு.ம.வி.
புத்தளம்



எம்.எப்.எம். பாயிக்
அபுக்காகம,
முன்னேக்குளம்



எம்.ஆர்.எப். ஹிமா
கு/அல்-ஹுஃதா மு.ம.வி.
ரம்முகந்தன

### பாராட்டை பெறும் சித்திரங்கள்



ஆர். ரமீஜா பேகம்
கு/முதுந்துவ மடிகே மு.ம.வி.
இப்பாகமுவ



ஐ. ஆயிஷா
கு/அந்நூர் ம.க.
பாணகமுவ



பாத்திமா
ஸஹிரா மு.ம.வி.
அநுராதபுரம்



எப். மின்பா மின்ஹாஸ்
திஹாரி இஸ்லாமிய பாடசாலை
திஹாரி



எப்.எப். றிப்னா
அல்மினா மு.வி.
மூதூர்



ஹாபிழா மதீர்
கா/உஸ்வதுன் ஹஸனா ம.வி.
காலி



எம்.ஆர்.எப். நஸ்ரின்
குளி/அல்ஹுஃமைரா மு.வி.
ஏதண்டவெல



எம்.ஆர்.எப். நப்ஹா
குளி/அல்ஹுஃமைரா மு.வி.
ஏதண்டவெல



ஆர். சைரம்
புத்தளம்



ஸப்னா நிஸவ்விர்
பெலந்த மு.வி.
அகலவத்த



எம்.ஏ.எப். அக்ஷா
குளி/அல்ஹுஃமைரா மு.வி.
ஏதண்டவெல



எஸ். சபூரா பான
அல்-அக்ஷா தே.பா.
கற்பிட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைநகரில் தலைநிமிர்ந்து நிற்கும் மாபெரும் புத்தக நிலையம்

# இஸ்லாமிக் புக் ஹவுஸ்

அறிவுக் களஞ்சியத்தின் நுழைவாயில்

ஒரே கூரையின் கீழ்

தமிழ், ஆங்கிலம், சிங்களம், அரபு மொழிகளில்...

- புனித அல்குர்ஆன்
- அகராதிகள்
- உளவியல்
- தர்ஜமாக்கள்
- கதைப் புத்தகங்கள்
- சமையல் புத்தகங்கள்
- இஸ்லாம்
- அல் ஹதீஸ்
- வரலாறு
- இலக்கியம்
- இலக்கணம்
- கவிதை
- பாடசாலை நூல்கள்
- பாடசாலை உபகரணங்கள்
- VCD/ DVD

**தினமும் காலை 8.00 மணியிலிருந்து**
**இரவு 10.00 மணிவரை உங்களுக்காகத் திறந்திருக்கும்...**

வெளியீடு மொத்த விற்பனைப் பகுதி:
0115 736098, 0772518641

தபால் மூலம் நூல்களைப் பெற:
011 2684851

புனித அல்குர்ஆன் பிரதிகளை
மொத்தமாகப் பெற: 0773171725

புதிய நூல்களின் தகவல்கள் அறிய
f<space>ibhbooks எனType செய்து
40404க்கு அனுப்புங்கள்.



eZ Cash
MasterCard
VISA
AMERICAN EXPRESS
Accepted



77, தெமடகொட வீதி,
கொழும்பு-9

**HOTLINE:**
**0115 925 935**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org